# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ்: 109 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (22.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 27, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

பார்லிமெண்ட் போய் மக்களுக்காக சண்டை பிடிப்பாங்கள் எண்டு பார்த்தால், இவங்கள் தங்களுக்குள்ள அடிபடுறாங்கள் என்னங்கோ...?



## உஷ்



அமெரிக்காவிலிருந்து கொழும்பு வந்த பெசில் ராஜபக்ஷவை வரவேற்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விமான நிலையம் செல்லவில்லையாம். இது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பெரும் கருத்தாடல்களை ஏற்படுத்தியுள்ளதாம்.

அமைச்சர் பதவிகளைப் பெற்றவர்களை விட அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்து நிற்பவர்களே பெசிலை வரவேற்கச் சென்றனராம். அதிலும் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பெசிலை குனிந்து கும்பிட்டமை தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சபையில் ஏட்டிக்குப் போட்டியாக வசைபாடிய எம்.பிக்கள்



## “மட்டக்களப்பை சூறையாடும் சந்திரகாந்தன்”

•நா. தினுஷா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துறை சந்திரகாந்தனும் சபையில் நேற்று ஏட்டிக்குப் போட்டியாக ஒருவருக்கொருவர் வசைபாடிக்கொண்டனர். வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான ஆறாம் நாள் விவாதம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமானது. 02 பக்கம்

## “கனடாவுக்கு ஆட்கடத்தும் சாணக்கியன்”



# புதியவகை போதை வில்லைகள்

### பாணந்துறையில் மீட்பு



பாணந்துறை, மாலமுல்ல பகுதியில் நபர் ஒருவரிடமிருந்து (வயது 36) புதியவகை போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஹிரண பொலிஸார் நேற்று தெரிவித்தனர். இந்த வில்லைகளின் மொத்த பெறுமதி சுமார் ஐந்து கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து மூவாயிரத்து 500 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

02 பக்கம்

# ‘றோ’ தலைவர் கொழும்பு வருகை!



## ரணிலுடன் முக்கிய சந்திப்பு

•நமது விசேட செய்தியாளர்

இந்தியாவின் பிரதான உளவு அமைப்பான ‘றோ’ வின் தலைமை நிர்வாகி சமந்த் கோயல், இரகசிய பயணமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் ‘தமிழன்’ நாளிதழுக்கு தெரிவித்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் அவர் சந்தித்து முக்கிய பேச்சுகளை நடத்தியிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

‘றோ’ இந்தியாவின் நலனைக் கருத்தில்கொண்டு, வெளிநாடுகளில் இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக நடக்கும் சதிசெயல்களை கண்காணிப்பதற்கும் தடைசெய்யவும் சதிகாரர்களை கண்டறிந்து கைது செய்வதற்குமான புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்பாகும்.

இந்த இந்திய உளவு அமைப்பு உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் முன்னர் உளவுப்பணி மேற்கொண்டிருந்தது. 1968 முதல் புதிதாக தொடங்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அமைப்பு வெளிநாடுகளில் மட்டும் தனது உளவுப் பணியை மேற்கொள்கிறது. இதன் தற்போதைய தலைவர் சமந்த் கோயல் ஆவார்.

இந்திய அரசின் செயலாளர் பதவி தரத்தில் உள்ள ‘றோ’ அமைப்பின் தலைவர்,...

02 பக்கம்



மாவீரர் நினைவு வாரத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு, நேற்று மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனைசெய்த ஆசிரியர் கைது

பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் விற்பனை செய்துவந்த தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரை களுத்துறை தெற்கு பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர். அந்த ஆசிரியரிடமிருந்து ஆயிரத்து 299 போதைப்பொருள் மாத்திரைகள் அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

02 பக்கம்

# முகக்கவச கொள்வனவில் 17 இலட்ச ரூபா இழப்பு

## ராகம வைத்தியசாலையில் மோசடி அம்பலம்



•ம. சுசிகலா

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து N95 முகக்கவசம் ஒன்றை 475 ரூபாவிற்கு கொள்வனவு செய்யக்கூடிய நிலையில், 2020ஆம் ஆண்டில் ராகம போதனா வைத்தியசாலையில் 1080 (N95) முகக்கவசங்களை ஒவ்வொன்றும்... 02 பக்கம்

# கொழும்புக்கு பெருமளவு கள்ளச்சாராயம் விநியோகம்



அரச அனுமதிபெற்ற மதுபானங்களின் விலை அதிகரித்துள்ளதால், சுகாதாரத்துக்கு பொருத்தமற்ற முறையில் தயாரிக்கப்படும் கள்ளச்சாராயம் கொழும்புக்கு பெருமளவில் விநியோகிக்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அதனடிப்படையில் அவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுக்க பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

02 பக்கம்

# பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் பெசிலை வரவேற்கச் சென்றது ஏன்?



## உடனடியாக பதவி நீக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை

•நா. தினுஷா

அமெரிக்காவில் இருந்து நாட்டுக்கு வந்த பெசில் ராஜபக்ஷவை வரவேற்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர் ஆகியோர் விமான நிலையத்திற்கு சென்றமை தேசிய ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. 02 பக்கம்

# பிறப்புச் சான்றிதழ்களில் ‘இனம்’ தவிர்க்கப்படும்

## பதிவாளர் நாயகம் நடவடிக்கை

•நா. தினுஷா

சமூக ரீதியான பிரச்சினைகளை நீக்கி புதிய தேசிய பிறப்புச் சான்றிதழொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும், புதிய சான்றிதழில் தேசிய இனம், இனம் என்பவற்றை குறிப்பிடுவதற்கான கட்டாயத்தை தவிர்க்க தீர்மானித்துள்ளதாகவும் பதிவாளர் நாயகம் பி.எஸ்.பி. அபேவர்தன தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 02 பக்கம்

## இந்தோனேஷியாவை உலுக்கிய நிலநடுக்கம்:

# 61 பேர் பலி; 700 பேருக்கு காயம்



10 பக்கம்

# சு.கவை பிளவுபடுத்த சூழ்ச்சிசெய்யும் நபர்கள்



## தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

•கே.சுபானி

புதிய கட்சிகளை உருவாக்குவதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் புதிய வியூகங்களை சூழ்ச்சியுடன் சிலர் கையாண்டு வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். 02 பக்கம்

# நோர்வே பிரஜையிடம் ரூ.12 கோடி மோசடி

## யாழில் யுவதிகள் இருவர் அதிரடியாக கைது



போலி ஆவணங்களைத் தயாரித்து நோர்வேயில் வசிக்கும் இலங்கையர் ஒருவரின் 12 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த இரண்டு யுவதிகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி மற்றும் வர்த்தகப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இணையக் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களென சந்தேகிக்கப்படுவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சந்தேகநபர்கள் நாவந்துறைப் பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 30 வயதுடைய இரு சகோதரிகள் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தமது தந்தை உயிரோடிருக்கும்போது யாழிலுள்ள தனியார் வங்கியொன்றில் 100 கோடி ரூபா பணமும் அதிகளவான நகைகளும் வைப்பிலிட்டுள்ளார். அவற்றை சட்டரீதியில் மீளப்பெற வேண்டும் என்றும் கூறி, 2021 ஜனவரி முதல் ஜூன் வரை... 02 பக்கம்


# ஓமானுக்கு ஆட்களை கடத்திய பெண் கைது

ஓமானுக்கு பெண்களை கடத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்று காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது அந்த பெண்ணிடம் வாக்குமூலம் பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மனிதக் கடத்தலில் ஈடுபட்ட முகவர் ஒருவர் அவிசாவளைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். 02 பக்கம்

## வெதஆராச்சி எம்.பி.



# சபையின் மத்தியில் சத்தியாக்கிரகம்

மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சி சபையில் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார். 02 பக்கம்

# மாற்று ஆடைகளை அணிந்து பாடசாலைகளில் ஆசிரியர்கள்

ஆசிரியர்களின் ஆடைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி இலகு ஆடைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ள நிலையில், ஒருசில பாடசாலைகளில் மாற்று ஆடைகளுடன் ஆசிரியர்கள் சமுகமளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டிலுள்ள சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இவ்வாறு தாம் விரும்பிய உடைகளில் சமுகமளித்துள்ளனர்.

ஆசிரியர்களுக்கு மாற்று ஆடைகள் அவசியம் என ஆசிரியர் சங்கங்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்கு அரசாங்கம் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'றோ' தலைவர்...

இந்தியப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குபவர். இவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும், பிரதமருக்கும் தனது அறிக்கைகளை நேரடியாக அனுப்புவார்.

இந்தியாவின் பிரதான உளவு அமைப்பான 'றோ' வின் தலைமை நிர்வாகி, மூடிய அறைக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியிருப்பது அரசியல் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

## நோர்வே பிரஜையிடம்...

பல தடவைகளில் நோர்வே பிரஜையிடமிருந்து 12 கோடி ரூபா பணத்தைப் பெற்றுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு 23 வங்கிக் கணக்குகளிலிருந்து பணம் மீளப் பெறப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணத்தின் ஒரு பகுதி இன்னொரு நபரின் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களை கைதுசெய்த சந்தர்ப்பத்தில் தெரியவந்துள்ளது.

இலங்கையரான நோர்வே பிரஜை செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை கைதுசெய்த சந்தர்ப்பத்தில் யாழ். நீதிபதிகள், வங்கி முகாமையாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் கிராமசேவகர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகளின் முத்திரைகள் மற்றும் கையொப்பங்கள் அடங்கிய போலி ஆவணங்கள், மோசடிக்குப் பயன்படுத்திய வங்கி புத்தகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## வெதஆராச்சி எம்.பி...

கறுப்பு ஆடை அணிந்து சபைக்கு வருகைதந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் வெதஆராச்சி, மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தினார்.

"இலங்கையில் மீன்பிடித்தொழில் நசிந்துவிட்டது. உடனடி நிவாரணம் கோரி சத்தியாக்கிரகம் செய்யப்போகிறேன்" என்று கூறிவிட்டு சபையின் நடுவே தரையில் அமர்ந்தார்.

இரு தரப்பு எம்.பிக்களும் கூச்சலிட்டதால் நாடாளுமன்றம் அமைதியிழந்தது.

சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வெதஆராச்சியை அவருக்குரிய ஆசனத்தில் அமருமாறு கோரினார்.

"உங்கள் செய்தி கேட்கப்பட்டது, நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும். தயவுசெய்து உங்கள் இருக்கைக்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்று அங்கஜன் கூறினார்.

## புதியவகை போதை...

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வீடொன்றை முற்றுகையிட்டபோது இந்த போதை வில்லைகள் மீட்கப்பட்டதுடன், அவற்றை மறைப்பதற்கு முற்பட்ட சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் போதைப்பொருள் விநியோகம் தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவரென பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாணந்துறை விசேட பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## மாணவர்களுக்கு போதைப்பொருள்...

கட்டுகுருந்தவில் அமைந்துள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பயிற்சி முகாமுக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்களை தனியார் வகுப்புகளில் கற்பிப்பதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தேக நபர், களுத்துறை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வாடகை அடிப்படையில் வசித்துவந்துள்ளதுடன், அவர் மாவனெல்லவை நிரந்தர வதிவிடமாகக் கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை தெற்கு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கொழும்புக்குப் பெருமளவு...

இதுதொடர்பாக பொலிஸாருக்கு பாரியளவு தகவல்கள் கிடைக்கப்பெறுவதாக பாணந்துறைக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே தெரிவித்துள்ளார்.

பாணந்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, மீகொட மற்றும் ஜா–எல ஆகிய பிரதேசங்களில் கள்ளச்சாராயம் கொண்ட கேன் மற்றும் கோடா அடங்கிய பீப்பாய் உள்ளிட்ட பொருட்களுடன் சந்தேக நபர்கள் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த கள்ளசாராய உற்பத்திக்கான நீர் மிகவும் அசுத்தமான இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், கோடா பீப்பாய்களில் சிதைவடைந்த விலங்குகளின் உடற்பாகங்கள் கூட இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜா – எல மற்றும் மீகொட பிரதேசங்களிலிருந்து மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய இந்த கள்ளச்சாரயம், வாரத்துக்கு ஒரு முறை கொழும்பு நகருக்கு பெருமளவு விநியோகிக்கப்படுவதாக இந்த சுற்றிவளைப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

கள்ளச்சாராய போத்தல் ஒன்று 700 ரூபா முதல் 800 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், ட்ரக்டர் வாகனங்களிலும், அதிசொகுசு வாகனங்களிலும் இந்த கள்ளச்சாரயம் கொழும் புக்கு விநியோகிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.




## பிறப்புச் சான்றிதழ்களில்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய பிறப்புச் சான்றிதழை வெளியிட எதிர்பார்த்துள்ளோம். பிறப்பு மற்றும் மரண பதிவாளரினால் மாத்திரமே இதுவரைகாலமும் பிறப்புச் சான்றிதழ் வெளியிடப்பட்டது. எங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் புதிய வேலைத்திட்டத்துக்கமைய தேசிய பிறப்புச் சான்றிதழ் என்ற அடிப்படையிலும் பதிவாளர் நாயகத்தின் கையொப்பத்துடனேயே பிறப்புச் சான்றிதழ்களை வெளியிடுவோம். இது விசேட பிறப்புச் சான்றிதழாகவும் அமையும்.

தற்போதுள்ள நடைமுறைகளுக்கமைய தாய்மொழியான சிங்களம் அல்லது தமிழ் மொழியினூடாகவே பிறப்புச் சான்றிதழை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இருந்தபோதும், தேசிய பிறப்புச் சான்றிதழில் சிங்கள அல்லது ஆங்கிலம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கிலம் என்ற அடிப்படையிலேயே வெளியிடப்படும்.

அவ்வாறாயின் வெளிநாட்டுக்குச் செல்லும்போது பிறப்புச் சான்றிதழை மீண்டும் மொழிபெயர்க்கவேண்டிய அவசியம் இருக்காது. இந்த புதிய பிறப்புச் சான்றிதழினூடாக அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியும்.

மேலும், இதில் பல்வேறு பாதுகாப்பு விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதனால், யாராக இருந்தாலும் இது போலி பிறப்புச் சான்றிதழா அல்லது உண்மையான பிறப்புச் சான்றிதழா என்பதை பார்த்தவுடனேயே அடையாளங்காணக்கூடியதாக இருக்கும்.

இதிலுள்ள விசேட அம்சம் என்னவெனில், இந்த பிறப்புச் சான்றிதழுக்குக் கிடைக்கும் இலக்கம் மேலும் 15 வருடங்களில் தேசிய அடையாள அட்டையை எடுத்துக்கொள்ளும்போதே, பிறப்புச் சான்றிதழின் இலக்கத்தையே தேசிய அடையாள அட்டைக்கு பயன்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதனால், பிறக்கும்போதே இதனூடாக குழந்தையொன்றுக்கு தேசிய அடையாள அட்டைக்கான இலக்கமும் கிடைக்கிறது. இந்த இரு இலக்கங்களும் ஓரே இலக்கங்களாக கருத்திற்கொள்ளப்படும்.

அதேபோன்று, புதிய பிறப்புச் சான்றிதழில் தேசியத்துவம் மற்றும் இனம் என்ற இரண்டும் உள்ளடக்கப்படும். அதனடிப்படையில், தனிநபரின் விருப்பத்துக்கு ஏற்றவாறு இனத்தைக் குறிப்பிடவும் முடியும். குறிப்பிடாமல் இருக்கவும் முடியும். இனம் உள்ளடக்கப்பட்ட வேண்டும் என்பது கட்டாயமில்லை. இதில், முன்னருள்ள சான்றிதழ்களில்போன்று தந்தையின் தந்தை தொடர்பான விபரங்களை கோருவது இல்லை. பெற்றோர் திருமணமானவர்களா என்ற விடயமும் இதில் உள்ளடக்கப்படாது. சமூக ரீதியான பிரச்சினைகள் இதிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

ஒரு பக்கத்தைக்கொண்ட வரையறுக்கப்பட்ட அளவிலேயே இது வெளியிடப்படும். இதுபோன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன - என்றார்.

## ஓமானுக்கு ஆட்களை ...

அத்துடன், முதலாவது சந்தேக நபர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டு, இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முகக்கவச கொள்வனவில்...

2,050 ரூபாவுக்கு கொள்வனவு செய்ததன் மூலம் பதினேழு இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் சுகாதார அமைச்சுக்கு பரிந்துரை செய்துள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சு 2021 டிசம்பர் 31ஆம் திகதி நடத்தப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ விநியோகத் திணைக்களம் போதியளவு முகக்கவசங்களை வைத்தியசாலைக்கு வழங்கியிருந்தபோதும் இந்த 1,080 முகக்கவசங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவ விநியோகத் திணைக்களத்தால் வழங்கப்படும் முகக்கவசங்கள் ஆய்வக ஊழியர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற நுண்ணுயிரியல் நிபுணரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த புதிய கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் சுகாதார அமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.

இந்த முகக்கவசங்கள் முறையாக கொள்முதல் செய்யப்படவில்லை என்றும், அந்த செயற்பாட்டில் பல சிக்கல்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி, கொள்முதலில் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்களில் ஒன்று போலியானது. இந்த மூன்று ஏலதாரர்களும் இந்தப் பொருட்களை வழங்குவதற்கு பதிவுசெய்யப்படவில்லை. மேலும், இந்த முகக்கவசங்களை கொள்முதல் செய்த விநியோகத்தரிடமிருந்து கொடுக்கப்பட்ட தகவல்கள் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அது தொலைநகல் மூலம் செய்யப்பட்டது என்றும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆனால், அதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. பின்னர், இது அவசர கொள்முதல் என்றும், தொலைபேசி மூலம் விலைகளைப் பெற்று பரிவர்த்தனை செய்ததாகவும் மருத்துவமனை நிர்வாகம் சுகாதார அமைச்சுக்குத் தெரிவித்துள்ளது.

## சபையில் ஏட்டிக்குப் போட்டியாக...

இந்த விவாதத்தின்போது உரையாற்றிய சாணக்கியன் எம்.பி., சிவநேசத்துரை சந்திரகாந்தனை கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருந்துகொண்டு, அந்த மாவட்டத்தை சூறையாடி வருகிறார். இவரால் செய்யப்பட்ட இருபது ஊழல் சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. எனவே, சந்திரகாந்தனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக இருக்கும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் பல்வேறு ஊழல் செய்கிறார். முடிந்தால் இவரின் கொள்ளைகளை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆதாரங்களுடனேயே இதனைக் குறிப்பிடுகிறேன்.

சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்டத்தை சூறையாடிக்கொண்டிருக்கிறார். இவரால் மேற்கொள்ளப்பட்ட 20 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான விவரங்கள் என்னிடம் இருக்கின்றன.

எழுபத்தைந்தாவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். விக்கிரமசிங்க – சம்பந்தன் ஒப்பந்தத்தை செய்து, அதனூடாக தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்கவேண்டும்.

வெறுமனமே சர்வதேசத்தையும், தமிழ் தலைமைகளையும் ஏமாற்றும் பொய்யான வாக்குறுதிகளை ஏற்க முடியாது. பீனிக்ஸ் பறவைபோல் மீண்டும் மீண்டும் எமது அரசியல் உரிமைக்காக காலம் காலமாக போராடுவோம்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால், சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்று குறிப்பிடும்போது தமிழ்ச் சமூகத்திற்கான அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்த தன்மையில் செயற்படுவோம்.

கோட்டா - மஹிந்த சகோதரர்களுக்கு மத்தியில் ஒற்றுமையில்லாமல் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு ஓடிப்போனார். இவ்வாறு கருத்து முரண்பாடுகளுக்காக தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம். நாம் பீனிக்ஸ் பறவைகள் போல் மீண்டும் மீண்டும் வருவோம் - என்றார்.

இந்நிலையில், விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சிவநேசத்துரை சந்திரகாந்தன் எம்.பி., சாணக்கியன் எம்.பியின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தார்.

"வடக்கு, கிழக்கு மக்களை காப்பற்ற வேண்டும் என்று கூறிகொண்டு ஆட்கடத்தல் செய்கின்ற, மூன்று கோடி ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு கனடாவுக்கு ஆட்கடத்தல் செய்யும் சாணக்கியன், என்மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை.

சாணக்கியன் எம்.பி, தன்னிச்சையான, விஷமமான பொய் கருத்துகளை தொடர்ந்து சிங்கள மொழியில் முன்வைத்து வருகிறார். சாணக்கியன் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். நான் சபையில் இருக்கும்போதே நானொரு கள்ளன் என்றளவுக்கு சபையில் வாதாடினார். இந்த உயரிய சபையில் இருக்கும் ஏனைய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மத்தியில் ஒரு பிழையான விம்பத்தையும், ஊடகங்களினூடாக பார்த்துக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் என் தொடர்பில் பிழையான பிம்பத்தை தோற்றுவிக்கவுமே இவ்வாறான கருத்துகளை முன்வைத்து வருகிறார்.

சிறைச்சாலையிலிருந்து அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டேன் என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அடுத்த தேர்தலை மையமாக வைத்தே இந்த விடயங்களைப் பேசுகிறார். அதுமாத்திரமல்ல, அவர் சொல்ல விளையும் விடயம் என்னவென்றால், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற அடிப்படையில், விசாரணைக் குழுவில் அவர் பெயரில் இருக்கும் கம்பனிகளை பற்றி விளக்கம் கேட்டிருந்தேன். அதனை அறிந்துவிட்டார். இவ்வாறான கபடர்களுக்கு சுமந்திரன் போன்ற எம்.பிக்கள் சாதகமாக பேசுகிறார்கள்.

வெட்கப்பட வேண்டும். இவர்களின் தேசிய உணர்வு இதுவே. வடக்கு, கிழக்கு மக்களையும் காப்பற்ற வேண்டும் என்றும் அவர்களை ஆர்வப்படுத்த வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு ஆட்கடத்தல் செய்கின்ற, மூன்று கோடி ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு கனடாவுக்கு ஆட்கடத்தல் செய்யும் சாணக்கியன், என்மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து என்னை கள்வன் என்கிறார்.

இந்த நாடாளுமன்றத்தினுடைய நடைமுறைகளைப் பின்பற்றவேண்டுமென்றே நான் விரும்புகிறேன். இந்த சபைமீது மக்கள் அதிருப்தியடையக்கூடாது. கௌரவத்தை பாதுகாக்க வேண்டும், நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. ஆனாலும், சத்தமிட்டு என்னையும் எனது கட்சியையும் அவமானப்படுத்தும்போது அதற்கு பதில் பேசாமல் இருக்கமுடியாது. என்னுடைய நேரத்தில் பேசுமாறு சாணக்கியன் கோரியதாலேயே இந்த விடயங்களை குறிப்பிட்டேன்" - என்றார்.

சந்திரகாந்தன் எம்.பி., நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது சாணக்கியன் எம்.பி. சபையில் இருக்கவில்லை. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பல்வேறு தடவைகள் எழுந்து சந்திரகாந்தனின் உரையை எதிர்த்துக் குரல் எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சு.கவை பிளவுபடுத்த...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கைவிட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கி அதனையும் கைவிட்டு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தனர். தற்போது குமார் வெல்கமவுடன் சேர்ந்துகொண்டு புதிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கியுள்ளதனூடாக தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லா தொழிப்பதற்கான புதிய யுக்திகளை கையாண்டு வருகின்றனர்.

இவ்வாறு கட்சி விட்டு கட்சி தாவி புதிய கட்சிகளை உருவாக்கி பொதுஜன பெரமுன பிளவுபட்டதைபோன்றே இந்த புதிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இல்லாமல் போய்விடும் - என்றார்.

மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களை சுதந்திரக் கட்சியுடன் ஒன்றிணையுமாறு அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர அழைப்பு விடுத்துள்ளார்.

ஓர் அரசியல் கட்சி என்ற ரீதியில் பொதுஜன பெரமுகவுக்கு இனியும் மக்களின் ஆதரவு கிடைக்காது. ஆகையால் அக்கட்சி உறுப்பினர்கள் இணைவதற்குத் தகுதியான கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே என அவர் இதன்போது குறிப்பிட்டார்.

கண்டி மல்வத்து மகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், அப்போது அவர்களிடமிருந்து சாதகமான பதிலெதுவும் கூறாது கோரிக்கையை நிராகரித்தனர்.

எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு அவர்களின் தெரிவாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியைவிட பொதுஜன பெரமுனவின் தாய் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைவது பொருத்தமானது.

கட்சிக்குள் உள்வாங்குவதற்காக அமைச்சுப் பொறுப்புகளை பெற்றுக்கொண்டவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்னேற்றுவதற்காக புதிய ஸ்ரீலங்கா கட்சியை வழிநடத்துபவரான சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக அறியமுடிகிறது.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தமைத்துவத்துக்குட்பட்டவர்அல்லர். ஆகையால் அக்கட்சி சுதந்திரக் கட்சி ஏற்படுத்தப்போகும் மாற்றம் குறித்து பேசுவதற்கு அவருக்கு உரிமையுள்ளதா? என இதன்போது பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கேள்வியெழுப்பினார்.

## பொலிஸ் ஆணைக்குழுவின்...

ஆகவே, பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினரை ஆணைக்குழுவில் இருந்து வெளியேற்றுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபாநாயகரிடம் நேற்று (21) கோரிக்கை விடுத்தார்.

பிரதேச சபை உறுப்பினர் பதவி கூட வகிக்காத பெசில் ராஜபக்ஷக்ஷவுக்கு எவ்வாறு வீதிப் போக்குவரத்து பொலிஸார் பாதுகாப்பு வழங்கினார்கள் எனவும் எதிர்க்கட்சியினர் இதன்போது கேள்வி எழுப்பினர்.

நளின் பண்டார எம்.பி. அங்கு மேலும் தெரிவித்ததாவது,

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தற்போது நடைமுறையில் உள்ளது. ஆனால், சுயாதீனத்தன்மை தொடர்பில் கேள்விக்குறியான தன்மை தோற்றம் பெற்றுள்ளது. பெசில் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு வருகை தந்தார். இவரை வரவேற்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திரா பெர்னாண்டோ, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.பெரேரா ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்கள். இது தொடர்பான காணொளி இறுவட்டை (சபையில் சமர்ப்பிக்கிறேன். நாட்டை நெருக்கடிக்குள்ளாக்கிய பெசில் ராஜபக்ஷவை வரவேற்க வெட்கமில்லாமல் விமான நிலையத்திற்கு சென்றவர்களும் சபையில் உள்ளார்கள்.

சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர் இவ்வாறு செயற்பட முடியுமா? இதன்மூலம் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்விருவரையும் ஆணைக்குழுவிலிருந்து காதை பிடித்து வெளியேற்றுங்கள் என சபாநாயகரிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர் நியமனம் இன்னும் ஓரிரு நாட்களில் இடம்பெறும் - என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார்,

பிரதேச சபை உறுப்பினர் பதவி கூட வகிக்காத பெசில் ராஜபக்ஷவுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட விருந்தினர் பகுதியில் எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது? அத்துடன், வீதிப் போக்குவரத்து பொலிஸார் எதனடிப்படையில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதை சபை முதல்வர் தெளிவுபடுத்த வேண்டும். கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கூட கடந்த மாதங்களில் செல்ல முடியாத நிலையில் இருந்த பெசில் ராஜபக்ஷவிற்கு எவ்வாறு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது என கேள்வியெழுப்பினார்.

# சாரணர் இயக்கத்தை விஸ்தரிக்க ஒத்துழைப்பு

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு







சாரணர் இயக்கத்தை 2024ஆம் ஆண்டாகும் போது ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியதாக விஸ்தரிப்பதற்கும் அதன் அங்கத்துவத்தை 02 இலட்சமாக அதிகரிப்பதற்கும் தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்காக கல்வி அமைச்சு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆகியவற்றின் ஆதரவைப் பெறவுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை தலைமை சாரணர் மற்றும் போசகர் பதவிகளை இலங்கை சாரணர் இயக்கத்தினால் உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு நேற்று (21) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ, உத்தியோகபூர்வ கழுத்துப்பட்டி மற்றும் நியமனச் சான்றிதழை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

சாரணர் இயக்கத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையும் இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு சாரணர் இயக்கத்தின் பூரண ஆதரவைப் பெற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவன் விஜேவர்தன தலைமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்ச்சிகளில் இணைந்து செயற்படுமாறும் சாரணர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இலங்கை சாரணர் இயக்க ஹோமாகம மாவட்ட கிளையின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாதிபதிக்கு நினைவுப் பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன், நினைவுச் சஞ்சிகையும் வழங்கப்பட்டது.

பிரதான சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ, பிரதி பிரதான ஆணையாளர் எம்.எஸ்.எஸ்.முஹீட், செயற்குழுத் தலைவர் ரன்சிறி பெரேரா மற்றும் ஏனைய அதிகாரிகள், ஹோமாகம மாவட்ட சாரணர் ஆணையாளர் கலாநிதி அனில் பெரேரா, புதிய மாவட்ட ஆணையாளர் கே.ஏ. சந்திரபத்மா, உதவி மாவட்ட ஆணையாளர் சுரங்க ஹந்தபான்கொட உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது

## ஜனாதிபதியின் செயலாளர் சமன் தெரிவிப்பு









சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தை களை மீள ஆரம்பிப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் - என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தெற்காசியா மற்றும் கிழக்காசியாவிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங்கள் மற்றும் உலகளாவிய பெறுமதி வலையமைப்புடன் இலங்கையை ஒருங்கிணைத்து அதனை கிழக்கு பிராந்தியத்திற்கும் விரிவுபடுத்துவதன் மூலம் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டு முயற்சியில் (RCEP) இணைந்துகொள்வதே ஜனாதிபதியின் விருப்பமாகும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்திச் செயற்பாட்டின் இறுதிப் பயனாளிகளாக தனியார்துறை கைத்தொழில்கள் இருப்பதால் இதற்கு ஆக்கப்பூர்வமாக பங்களிக்கு மாறு தனியார் துறைக்கு ஜனாதிபதியின் செயலாளர் அழைப்பு விடுத்தார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தை களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வர்த்தக சபை மற்றும் கைத்தொழில் ஆலோசனைக் குழுக்களுக்கு அறிவிக்கும் கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நிதியமைச்சில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் நிதி, வெளிவிவகார, வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சுகளின் செயலாளர்கள் கலந்துகொண்டதுடன், தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

உலகளாவிய வர்த்தகம் இன்று அதன் பழமைவாத வரம்புகளுக்கப்பால் உலகளாவிய உற்பத்தி வலையமைப்புகளை நோக்கி நகர்ந்துள்ளது. இன்னும் இலங்கையால் அதற்கேற்றவாறு செயற்பட்டு அதன் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. விநியோகத் திறனின் வளர்ச்சி மற்றும் சந்தை அணுகல் விரிவாக்கம் ஆகிய இரண்டும் உள்நாட்டுப் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கு இன்றியமையாததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்படி, சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செயல்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதோடு, முதலீட்டு வர்த்தகத் தொடர்புகள் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்திற்கு பயனளிக்கும் வகையில் பாரிய அளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்க்கக்கூடிய இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு அரசாங்கம் இப்போது ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தடைப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு புத்துயிரளிக்க அமைச்சரவை ஏற்கனவே வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவை நியமித்துள்ளதோடு, இந்த உடன்படிக்கையின் இறுதியில் உலகின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் சனத்தொகையில் 30% பங்கு வகிக்கும் பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) அங்கத்துவம் பெறுவதற்கும் இலங்கைக்கு வாய்ப்புகள் உருவாகும்.

இங்கு உரையாற்றிய நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, உள்ளூர் பொருளாதாரத்தில் கடன் அல்லாத வரவுகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்கள், சந்தைகளை பன்முகப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

மேலும், 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட முன்மொழிவாக அனைத்து சர்வதேச வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நிறுவப்படும் சர்வதேச வர்த்தக அலுவலகம் (ITO) தொடர்பிலும் கருத்துத் தெரிவித்த நிதியமைச்சின் செயலாளர், இந்தப் பேச்சுவார்த்தைகளை வணிக சபை மற்றும் தரப்பினருடன் இணைந்து பணியாற்றவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். இந்த வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை எளிதாக்குவதற்கு வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் இராஜதந்திர செயற்பாட்டு பொறிமுறைமை முழுமையாக தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன தெரிவித்தார்.


அரசாங்கத்தின் திட்டத்தின்படி, உத்தேச நிறுவனப் பொறிமுறையை முறையாக நிறுவியவுடன், அது வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு, அதன்மூலம் சர்வதேச வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் தனியார் துறை பிரதிநிதிகளும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டதுடன், இலங்கை ஏற்றுமதிக்கான வெளிநாட்டுச் சந்தையை விரிவுபடுத்துவது மற்றும் தற்போதுள்ள சந்தையைப் பாதுகாப்பது தொடர்பான முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த ஒப்பந்தங்கள், நடைமுறையில் ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் மற்ற வரி அல்லாத பிரச்சனைகளான ஒதுக்கீடு கட்டுப்பாடுகள், சோதனை தரநிலைகளுக்கான ஆய்வக வசதிகள், பரஸ்பர தரநிலை அங்கீகார உடன்படிக்கைகள் மற்றும் ஏற்றுமதி பொருட்களின் மீதான வரிகளை நீக்குதல் போன்றவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

மேலும், , வர்த்தக பேச்சுவார்த்தை செயல்முறை முழுவதும், தனியார் துறையுடன் வழக்கமான மற்றும் விரிவான உரையாடல், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் என்பதை தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு உறுதிப்படுத்தியது.

# காணாமல்போன நபர் சடலமாக மீட்பு



(பசறை நிருபர்)


கடந்த சனிக்கிழமையன்று காணாமல் போயுள்ளதாக உறவினர்களால் தேடப்பட்டுவந்த நபர் நேற்று (21) தேயிலை மலைப்பகுதியில் சடலமாக இனங்காணப்பட்டுள்ளார். லுணுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொப்டன் அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த வேலுகுமார் சுந்தரம் (60 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கால்நடைகளுக்கு இலைதழைகளை வெட்டுவதற்கு சென்ற நபர் வீடு திரும்பவில்லையென உறவினர்களால் தேடப்பட்டுவந்த நிலையிலேயே அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்காக சடலம் பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக லுணுகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



**சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்கள் கார்த்திகை முதல் நாளான நவம்பர் 17 அன்று, விரத மாலை அணிந்து விரதத்தைத் தொடங்கினார்கள். இந்த நிகழ்வு இங்கிரிய, றைகம் கீழ்ப்பிரிவில் அமைந்திருக்கும் அருள்மிகு பத்ரகாளி ஸ்ரீ சபரிகுரு சாஸ்தாபீட ஆலயத்திலும் நடைபெற்றது.**

# சிவனொளிபாதமலை பருவ காலம் ஆரம்பம்



எதிர்வரும் பௌர்ணமி தினத்துடன் சிவனொளிபாதமலை பருவ காலம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான பீடாதிபதி பெங்கமு தம்மதின்ன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எதிர்வரும் 6ஆம் திகதி காலை இரத்தினபுரி கல்பொத்தாவில ரஜமஹா விகாரையிலிருந்து மூன்று வழிகளில் சுவாமிகள் சிவனடிபாதமலைக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கல்பொத்தா வளைவிலிருந்து பொகவந்தலாவ வழியாகவும், இரத்தினபுரி பெல்மடுல்ல வழியாகவும், இரத்தினபுரி அவிசாவளை, தெகியோவிற்ற, யட்டியந்தோட்டை, கரவனல்ல, கித்துல்கல, கினிக்கத்தேன, வட்டவளை, ஹட்டன், டிக்கோயா, நோர்வூட், மஸ்கெலியா வழியாக நல்லதண்ணி நகரை நோக்கி சுவாமிகள் சென்று அங்கிருந்து இராணுவ அதிகாரிகள் சுவாமிகளை மலை உச்சிக்கு கொண்டுசெல்ல ஏற்பாடு செய்துள்ளனர்.

அங்கு அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னர் 7ஆம் திகதி அதிகாலை பிரித் ஓதும் வைபவம் நடைபெறும். அத பின்னர் 2022 /2023 சிவனடிபாதமலை பருவகாலம் ஆரம்பிக்கப்பட்டு 2023ஆம் ஆண்டு மே மாதம் வைகாசி விசாகம் பௌர்ணமி தினத்துடன் நிறைவுபெறும்.

இக்காலத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மற்றும் பாதசாரிகள் சிவனொளிபாதமலைக்கு வந்து தரிசனம் செய்ய சகல ஏற்பாடுகளையும் பூர்த்திசெய்துள்ளனர். மேலும், பாதுகாப்பு, மின்சாரம், குடிநீர் வசதி, வர்த்தக நிலையங்கள் சுகாதார வசதிகள் மற்றும் சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்ட நிலையில் உள்ளது.

யாத்திரிகர்கள் தரிசனம் செய்ய வரும்போது பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் (முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது) இவற்றை எடுத்து வர வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்றார்.

# ஓமானுக்கு பணிப்பெண்களை அனுப்பும் பதிவு இடைநிறுத்தம்

தனிநபர் விசாக்களில் ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழிலாளர்களாக இலங்கைப் பெண்களை அனுப்புவதற்கான பதிவு நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பயிற்றப்படாத மற்றும் வீட்டுப்பணி தொடர்பான பதிவு நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்ல துப்பரவுப் பணிகள் ஆரம்பித்துவைப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மாவீரர் வார ஆரம்ப நாளான நேற்று பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில் துப்புரவு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இத் துப்புரவுப் பணியில் மாவீரர்களின் உறவுகளுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கலந்துகொண்டிருந்தார்.

தொடர்ந்து இவ்வாரம் முழுவதும் இத் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன், மாவீரர் நாளான நவம்பர் 27 அன்று உணர்வுபூர்வமாக மாவீரர் நாள் பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில்



அனுஷ்டிக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com


**2022, நவம்பர் 22ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

## வடக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேவை

**ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தை வலுப்படுத்த இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதன்மூலம் 2023 முதல் 2027 வரை பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**வவுனியா நகர மண்டபத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்காக நான்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

**வட மாகாணத்தில் பசும்பால் கைத்தொழில் இந்திய உதவியின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.**

**எதிர்காலத்தில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும்.**

**உலகளாவிய உணவுப் பற்றாக்குறை எதிர்காலத்தில் ஏற்படலாம். அவ்வாறான சூழ்நிலையில், இலங்கையைப் பாதுகாக்க இந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம் முக்கியமானது என்றே கூற வேண்டும். ஆபிரிக்கா ஏற்கனவே உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது.**

**இதைத் தவிர, இன்னும் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று போஷாக்குக் குறைபாட்டைக் கட்டுப்படுத்தல், இரண்டாவது கிடைக்கும் விளைச்சலைப் பாதுகாத்தல் ஆகும். அறுவடையின்போது ஏற்படும் விரயத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அதேபோன்று, அவற்றை சேமிப்பதற்கும் நுகர்வோருக்கு விநியோகிக்கும் பணிகளைப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.**

**இதில் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு பாரிய பொறுப்புள்ளது. கிடைக்கும் மேலதிக உணவைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.**


**நாட்டுக்கு இப்போது புதிய ஆற்றல்மிக்க பொருளாதாரம் தேவை. இதன் முக்கிய பகுதி வட மாகாணமாகும். அதன்மூலம் நிறைய அந்நிய செலாவணியைப் பெறலாம். வவுனியா விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்து வருமானம் ஈட்டவும் வாய்ப்புகள் உள்ளன. கறுவா போன்ற பயிர்களை வளர்க்க வடக்கில் வாய்ப்புள்ளது. கால்நடை வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தலாம். 2023 முதல் 2027 வரையிலான ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வன்னிக்கும் பாரிய பொறுப்புண்டு என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுளார். புவி வெப்பமயமாதலின் தாக்கத்தை குறைப்பதற்காக வடமாகாணத்தில் பாரிய பசுமை ஹைட்ரஜன் திட்டம், மேம்படுத்தப்பட்ட நீர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் மீள் காடுவளர்ப்புத் திட்டம் என்பவற்றை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.**

**கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பத்தை எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் மீன்பிடிப் படகுகளுக்கான பசுமை ஹைட்ரஜன் வலுசக்தி முறையை உடனடியாக அறிமுகப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திலும் வடக்கின் பொருளாதாரத்திலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பது ஜனாதிபதியின் கருத்தாக இருக்கிறது.**

**வடக்கின் பொருளாதாரம் குறித்தும் நாட்டின் உணவுப்பாதுகாப்பு குறித்தும் ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்துகளுக்கு அப்பால் மேலும் பல விடயங்களை ஜனாதிபதி கவனத்தில் கொள்ளவேண்டும். வடக்கு - கிழக்கில் இன்று இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு பெறுவது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. அத்துடன் அந்தப்பகுதிகளில் போதைவஸ்து விற்பனை மற்றும் பாவனை வீதம் படுமோசமான நிலையை அடைந்து சமூகங்களை சீரழித்துக்கொண்டிருக்கிறது. அதேபோல் பொருளாதார நெருக்கடியால் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களும் தினசரி அதிகரித்துக்கொண்டிருக்கின்றன.**

**வடக்கு மக்களின் உடனடிப் பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்ப்பாராயின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்கவும் அது உதவுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.**

## சுட்டுப் பொசுக்கும் லேசர் ஆயுதம்



21ஆம் நூற்றாண்டின் கால்வாசி முடிவதற்குள், லேசர் கதிர்கள் இராணுவ ஆயுதமாக மாறியுள்ளன. அண்மையில், பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சகம் டிராகன்பயர் என்ற ஒரு லேசர் கருவியை இராணுவத் தளவாடமாக ஆக்குவதற்கான சோதனைகளைச் செய்தது.

அதிக சக்தி வாய்ந்த, அதிக தொலைவு பாயக்கூடிய லேசர் கதிர்களை உருவாக்கும் கருவியான டிராகன் பயர், பூமியிலிருந்தபடியே, எதிரி ஏவுகணைகள், ட்ரோன்கள் போன்றவற்றை ஒளியின் வேகத்தில் சுட்டுப் பொசுக்கும் திறன் கொண்டது.

பிரிட்டன் கடந்த இரு மாதங்களில், கடல் மற்றும் வான் இலக்குகளை லேசர் கதிர் மூலம் தாக்கி சோதனைகளை நடத்தியது.

லேசர் கதிர் கருவிகளை உருவாக்குவதற்கு கணிசமான செலவு ஆகும். என்றாலும், அவற்றை வைத்துப் பராமரிப்பதற்கோ, கதிர்களை சுடுவதற்கோ அதிக செலவுகள் ஆகாது.



# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது பழமொழி. அதுபோல ஒரு மனிதனுடைய எதிர்காலம் அவனது பழக்கவழக்கங்கள் அனைத்தும் சிறு வயதிலிருந்தே ஆரம்பித்து விடுகின்றன. அந்த வகையில், இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டை வழி நடத்த வேண்டியவர்கள். அதனாலேயே ஒவ்வொரு குழந்தையையும் நல்வழிப்படுத்துவது அனைவரினதும் கடமையாக இருக்கின்றது. ஆனால், இன்றைய சிறுவர்கள் பல்வேறு வழிகளிலும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் சிறுவர் துஷ்பிரயோகம் உலகம் முழுவதிலுமே காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே... அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே...” என்ற பாடலைப் போல் பிறக்கின்ற குழந்தைகள் அனைத்தும் பூமியில் நல்லவர்களாகத்தான் பிறக்கின்றன. அவை சார்ந்துள்ள குடும்பம் மற்றும் சமூகம்தான் வளர்ச்சியை தீர்மானிக்கின்றன. சிறு வயது என்பது கள்ளங்கபடமற்றது. அந்த பராயத்தில் குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை பாதுகாக்க வேண்டியது பெரியோர்களின் கடமையாகும்.

சட்டப்படி 18 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரையும் சிறுவர்கள் என்றழைக்கலாம். இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என டொக்டர் அப்துல்கலாம் கூறியிருக்கின்றார். ஏனென்றால், இன்றிருக்கும் எல்லாக் குழந்தைகளும் தான் நாளைய தேசத்தை கட்டியமைக்க காத்திருக்கும் எதிர்கால தூண்களாகும். இதனை பெற்றோரும் மற்றோரும் நன்குணர்ந்து செயற்பட வேண்டும். இதனால்தான் உலகின் சிறந்த நாடுகள் அனைத்தும் தமது நாட்டின் சிறுவர்களை பாதுக்காக்கவும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து வாய்ப்புகளிலும் அதிகம் கவனம் செலுத்துகின்றன.

1989ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1979ஆம் ஆண்டு சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரே உலக அளவில் சிறுவர் உரிமைகளைப் பேண வேண்டுமென்ற புத்தெழுச்சி உருவானது. 1989ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலத்திற்குக்கு காலம் சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சாசனங்களை இலங்கையும் 1992ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் உலகில் வாழும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்களே. இவர்கள் தமக்குள் எந்தவொரு பால், இன, மத, நிற வேறுபாடுகளுமின்றி அவர்களுக்கான உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். அவற்றுள் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பான உரிமை என பொதுவான உரிமைகள் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படை சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அரச சட்டங்கள் அமைய வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொண்டே ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர்களுக்கான உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றுள் குறிப்பாக பாலியல் வல்லுறவுகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, வன்முறையான தண்டனைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை என்பன சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமைகள் என பாகுப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் சிறுவர்கள் மீதான உடல், உள, பாலியல் ரீயான துஷ்பிரயோகங்கள் என்பன இன்று மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் நாட்டின் நற்பெயருக்கும் பெரும் சவாலாக இருக்கின்றன என்றுதான் கூற வேண்டும்.

அந்தவகையில் இன்றைய சிறுவர்கள் பல்வேறு வகைகளிலும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் சிறுவர் துஷ்பிரயோகம் உலகம் முழுவதிலும் காணப்படுகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாக மாறிவிட்டது. சிறுவர்கள் மீதான வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் இன்று நேற்று தோன்றியதல்ல. நீண்ட காலமாகவும் சில திட்டமிட்ட வகைகளிலும் சிறுவர்கள் நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதை காணக்கூடியதாகவே இருக்கின்றது.

அத்துடன் இலங்கையிலுள்ள 80 சதவீதமான சிறுவர்கள் அறியாமையினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதாக 'சேவ் த சில்ரன்ஸ்' அமைப்பு தகவல் வெளியிட்டிருந்தது. அத்துடன் பாலியல் செயற்பாடுகளை தவிர்ந்த பல்வேறு காரணிகளினாலும் சிறுவர்கள் மனதளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகம் என நான்கு வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளதாக இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய அளவில் 1.7 பில்லியன் அளவிலான சிறுவர்கள் துஷ்பிரயோகங்களை எதிர்கொள்கின்றனர். 2012 முதல் 2020 வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் மட்டுமே 5891 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளது மட்டுமல்லாமல் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் 21.9 சதவீதத்தினால் அதிகரித்து வருவதாக யுனிசெப் நடத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

குறிப்பாக இலங்கையில் வாழும் சிறுவர்கள் குடும்ப வன்முறைகளாலேயே மிகவும் பாதிப்படுகின்றனர். மிகவும் நெருங்கிய நண்பர்களாலேயே துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனாலேயே பல சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன.

இதேவேளை சிறுவர் உரிமைகள் மீறப்படுவதால் எற்படும் விளைவுகள் குறித்து நோக்குவோமானால், ஒவ்வொரு நாட்டினதும் எதிர்காலத் தூண்களான சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவது அந்நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்வதாகத்தான் கருத முடியும். அந்த வகையில் எதிர்காலக் கனவுகள் மற்றும் இலட்சியத்தோடு சிறுவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். குறித்த சிறுவர்களை அன்பாகவும் பண்பாகவும் வழிநடத்துவது போல அவர்களும் நற்பிரஜையாக உருவாகுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கப்ப பெறும் என்பதில் எந்த வித ஐயமுமில்லை.

ஆனால், இன்று பாடசாலைக்கு செல்லாது வேலைக்கு செல்வது அதாவது குழந்தை தொழிலாளர்கள் உருவாவது அத்துடன் பாலியல் செயற்பாடுகளுக்கு அடிமையாக்கப்படுவது போன்ற செயற்பாடுகள் இலங்கையில் மட்டுமல்லாது உலகம் முழுவதிலுமே நடந்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் அவர்களின் வாழ்வை சீரழிப்பதோடு, வன்முறையான எதிர்கால சமுதாயத்தை உருவாக்கவும் வழிவகுக்கின்றது.

ஏனைய உரிமைகளை விட சிறுவர் உரிமைக்கு சர்வதேச ரீதியிலும் இலங்கையிலும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு சமூகத்தை சீர் செய்ய வேண்டுமாயின் அதன் அடித்தளம் வலிமையாக அமைய வேண்டும் என்பதனாலேயே பல்வேறு நிதியங்களும் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் சமூக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில், உலகளாவிய ரீதியில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் UNICEF, Save the children, Global Children, Children international போன்ற சர்வதேச நிறுவகங்கள் சிறுவர் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்றன. அதுமட்டுமல்லாது பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக நாடளாவிய ரீதியில் முடக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களினால் சிறுவர் மீதான வன்முறைகள் அதிகரித்திருந்தமை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இது சிறுவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தையும் தற்கொலைக்கு தூண்டும் செயலாகவும் மாறி இருந்ததை பல சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறித்த காலகட்டத்தில் சிறுவர்கள் இணையத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இணையவழி சிறுவர் துஷ்பிரயோக செயல்கள் அதிகரித்துள்ளன. இது குறித்து பெற்றோர்களுக்கு தெரியாத போதும், இலங்கையில் தற்போது அதிகரித்து வருகின்ற சிறுவர் துஷ்பிரயோக செயல்களில் இதுவும் பிரதானமான ஒன்றாகும்.

இவ்வாறான முறைப்பாடுகளைப் பெற்று அதற்கான சட்ட நடிவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காக சிறுவர்களுக்கான விசேட சைபர் விசாரணை பிரிவு ஒன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவியுள்ளது.இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவையான 1929 ஊடாக முறைப்பாடு செய்வதன் மூலம் குறித்த பிரிவின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிலையில் சிறுவர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தொடர்பான அறிவு சமூகத்தின் மத்தியில் மிகவும் அவசியமானதொன்றாகும். அப்போதுதான் சிறுவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற துஷ்பிரயோகங்களில் இருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். வன்செயல் மூலம் பிள்ளையொன்றுக்கு தீங்கிழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த பிள்ளையின் குடும்பம், நண்பர்கள் போன்று ஏனையவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் உலகின் சிறந்த நாடு எதுவெனில் சிறுவர்கள் மிகவும் பாதுகாப்பாக வளரக் கூடிய சூழலை எந்த நாடு கொண்டிருக்கின்றதோ அந்த நாடுதான் சிறந்த நாடாக அமைய முடியும்.

சிறுவர்களின் வெற்றிகரமான ஆளுமை மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் காலத்தின் தேவையாக உள்ளது. எதிர்கால உலகின் சவால்களை வெற்றிகொள்ள கூடிய நற்பண்பும் அறிவும் பலமிக்க எதிர்கால தலைமுறையை கட்டியெழுப்ப சமூக அளவிலான நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை முன்னெடுப்பதே சிறந்தது.



**யதுஷா ரவித்தியாகராஜா**

## நக்கல் நமசிவாயம்

***கிராமங்களுக்கு போகவேண்டுமெண்டா ராஜபக்ஷக்களின் ஆதரவு தேவையென்று சனத் நிஷாந்த சொல்லுறார்..! இந்த நாடு இப்போதைக்கு உருப்படும் நிலையில் இல்லையென்பது மட்டும் விளங்குது..!***



## இன்றைய நாளில்...

*** 1908 – அல்பேனிய எழுத்துகள் அறிமுகப்படுத்தப் பட்டன.**

*** 1935 – பசிபிக் பெருங்கடலைத் தாண்டி முதன்முறை யாக விமானத் தபால்களை விநியோகிக்கும் பணியில் சைனா கிளிப்பர் என்ற விமானம் கலிபோர் னியாவை விட்டுப் புறப்பட்டது. (இவ்விமானம் நவம்பர் 29இல் 110,000 தபால்களுடன் மணிலாவை அடைந்தது.)**

*** 1963 – அமெரிக்க அரசுத்தலைவர் ஜோன் எஃப். கென்னடி சுட்டுக்கொல்லப்பட்டார். டெக்சஸ் ஆளுநர் ஜோன் கொனெலி படுகாயமடைந்தார். துணைத் தலைவர் லின்டன் பி.ஜான்சன் 36ஆவது அரசுத்தலைவராக நியமிக்கப்பட்டார்.**

*** 1986 – மைக் டைசன் தனது 20ஆவது அகவையில் குத்துச்சண்டை வாகையாளராகத் தெரிவுசெய்யப் பட்டார்.**

*** 1995 – உலகின் முதலாவது முழுமையான அசைவூட்டல் திரைப்படம் டோய் ஸ்டோரி வெளி யானது.**

*** 2007 – இலங்கை அரசு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தடைவிதித்தது.**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 21.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 126 7225 | 138 0203 |
| கனேடியன் டொலர் | 155 8313 | 168 1 46 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38,3786 | 41,4087 |
| யூரோ | 258 2376 | 273 5382 |
| ஜப்பான் யென் | 1 4418 | 1 5504 |
| சிங்கப்பூர் டொலர் | 15 616 | 160 060 |
| ஸ்ரேலிங் பவுன் | 314 3801 | 331 133 |
| சுவிஸ் பிரான்ங் | 263,0 00 | 281 141 |
| ஐ.அ.டொலர் | 25 8808 | 260 7214 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853 016 |
| குவைட் | குவைட் தினார் | 0,070 657 |
| ஓமான் | ஓமான் றியால் | 833,0 57 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 2140 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6030 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8516 |



யட்டிநுவர பிரதேச சபைக்குட்பட்ட முறுத்தலாவிலிருந்து பிலிமத்தலாவை செல்லும் வீதியில் தெஹிகம கஹட்டங்க அல்-இல்மா பாடசாலைக்குச் செல்லும் வீதியோரத்திலுள்ள வீட்டின் ஒரு பகுதியையும் மண்சரிவுக்குட்பட்ட ஆபத்தான இடங்களையும் யட்டிநுவர பிரதேச சபை தவிசாளர் நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போது யட்டிநுவர பிரதேச சபையின் தவிசாளர் நிசாந்த ரூப்பசர, யட்டிநுவர பிரதேச சபையின் உறுப்பினர் வசீர் முக்தார், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் நகர பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# நாட்டின் நிதித்துறை முன்னேற்றத்துக்கான புதிய பிரேரணைகளை டிசம்பரில் முன்வைக்க நடவடிக்கை

## பொருளாதார ஸ்திரத்தன்மை குறித்த குறுகிய மற்றும் நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவை உப குழுவில் கலந்துரையாடல்



இந்நாட்டின் வங்கி, காப்புறுதி மற்றும் தொழிற்துறைகளின் முன்னேற்றத்துக்கான புதிய பிரேரணைகளை எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாக பொருளாதார ஸ்திரத்தன்மை குறித்த குறுகிய மற்றும் நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவை உப குழுவின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வங்கி, காப்புறுதி மற்றும் தொழிற்துறைகளில் தற்பொழுது எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு உப குழு அண்மையில் (18) கூடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய வங்கி வட்டி வீதங்கள் போன்று பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய பொது வரிகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் விதித்துள்ள வரிகள் காரணமாக தொழில்முயற்சிகளை மேற்கொள்வதில் சிரமம் காணப்படுவதாக உபகுழுவின் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

அதேபோன்று, இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ளதால் வீழ்ச்சியடைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிலைமைகள் தொடர்பிலும் இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. தாம் முகங்கொடுக்கும் சிரமங்கள் தொடர்பில் வர்த்தக சமூகத்தினர் இதன்போது குழுவுக்கு விளக்கமளித்தனர். மேலும், வாகன இறக்குமதி, கட்டட நிர்மாணத்துறை மற்றும் விசேடமாக சுற்றுலாத்துறை என்பன இவ்வாறு வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளமை குறித்த விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

நாட்டின் வங்கித்துறை பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு மத்திய வங்கியினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் குழுவில் முன்வைத்தார்.

நாட்டில் பாரிய அரச வங்கிகளும் தனியார் வங்கிகளும் இருப்பதாகவும், வங்கிகளை நடத்துவதில் நம்பிக்கை மிகவும் முக்கியமானது எனவும் உபகுழுவின் தலைவர் தெரிவித்தார். அதனால் அந்த வங்கிகளுக்கிடையில் நம்பிக்கையைப் பேணி வங்கிகளைப் பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டுசெல்லும் அவசியம் தொடர்பில் அவர் கருத்துகளை முன்வைத்தார்.

அதேபோன்று, இடைக்கால வரவு-செலவுத் திட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மூலம் ஜனாதிபதியினால் பிரேரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் உபகுழுவின் தலைவர் மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் வங்கித் துறையினரிடம் வினவினார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக மேற்படி துறைகளில் எழுந்துள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கான பிரேரணைகளைத் தமது குழு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதகாக குறுகிய மற்றும் நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவை உப குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டினார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் விஜிர அபேவர்தன உள்ளிட்டோரும், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி நாட்டின் பிரதான அரச மற்றும் தனியார் வங்கிகள், வங்கி ஊழியர்கள் சங்கம், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் தனியார் வர்த்தகத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்,

# வசந்த முதலிகே, ஸ்ரீ தம்ம தேரர் ஆகியோரை விடுவிக்க உக்குவளை பிரதேச சபை உறுப்பினர் சுரேன் வேண்டுகோள்

(மாத்தளை நிருபர்)

பயங்கரவாதத் தடுப்புக்காவல் எனும் பெயரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் ஸ்ரீ தம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுவித்து அவர்களை ஜனநாயக ரீதியில் செயல்பட அரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளபட வேண்டும் எனவும் பயங்கரவாதத் சட்டத்தின் கீழ் வசந்த முதலிகே மற்றும் ஸ்ரீ தம்ம தேரர் ஆகியோரை 90 தினங்கள் தடுத்துவைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டு விடுத்த விசேட நடவடிக்கைகளை உடன் வாபஸ் பெற்று மேற்படி இருவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனின் கட்சி அரசியல் குழு உறுப்பினரும் உக்குவளை பிரதேச சபை உறுப்பினருமான சுரேன் தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகே மற்றும் ஸ்ரீ தம்ம தேரர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு 90 தினங்கள் கழிந்த நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறித்து இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்படி அரசியல் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சுரேன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வசந்த முதலிகே, ஸ்ரீ தம்ம தேரர் ஆகிய இருவரும் நாட்டின் எந்தத் திசையிலும் எந்த விதமான பயங்கரவாத செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

நாட்டின் ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகள் சம்பந்தமாகவும் விவசாயிகளின் தேவைகளுக்கான பசளை, மண்ணெண்ணெய் மற்றும் விதை நெல் போன்றவை இல்லாமை காரணாக நாட்டின் விவசாய நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பித்த நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடன் நிவாரணம் வழங்கும்படியும் நாட்டின் வடக்கு, கிழக்கு உட்பட சகல கடற்பிரதேசங்களிலும் பாதிக்கப்பட்டுள்ள மீன்பிடித் தொழிலாளர்களின் தினசரி வாழ்க்கையைக் கட்டியெழுப்பிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், நாடு தழுவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை நீக்கிட வேண்டும் எனவும், மேற்படி வசந்த முதலிகே மற்றும் ஸ்ரீ தம்ம தேரர் ஆகியோர் வீதியில் இறங்கி ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் கலந்துகொண்டார்களேயொழிய இவர்களால் எந்தவித பயங்கரவாத செயலும் இடம்பெறவில்லை என்பதை நாட்டின் கல்விமான்கள், புத்திஜீவிகள் வெளிப்படையாக கருத்துகளைத் தெரிவித்து இவர்கள் இருவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனவும் வேண்டி வருகின்றனர்.

மேற்படி இருவரையும் விடுதலை செய்யும்படி எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் சர்வ பல்கலைக்கழக மாணவ ஒன்றியங்களும் தினசரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் இவர்களுக்கு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியோரை முடக்கி அடக்க முயல்வது நாட்டில் ஜனநாயகத்துக்கு சாவு மணி அடிக்கப்பட்டுவிட்டதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

எனவே, நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக வசந்த முதலிகே, ஸ்ரீ தம்ம தேரர் ஆகிய இருவரையும் விடுதலை செய்திட அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனின் கட்சி அரசியல் குழு உறுப்பினரும் உக்குவளை பிரதேச சபை உறுப்பினருமான சுரேன் மேலும் தெரிவித்தார்.

## சமாதான நீதவான் நியமனம்



இலங்கை இல்லந்தோறும் நற்செய்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், இலங்கை நம்பிக்கை பங்காளர் அமைப்பின் ஸ்தாபகருமான நோயல் அபிலாஷன் கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

நோயல் அபிலாஷன் இன, மத பேதமின்றி ஒரு தாய் மக்கள் என்ற எண்ணக்கருவில் சேவையாற்றி வருகின்றார். மேலும், வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கிவருகின்றார்.

சமூகப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டுள்ள அவரது சமூக பங்களிப்பை கருத்திற்கொண்டு இந்தியாவிலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இவரது இந்த நியமனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற அறிக்கைகளை மென் பிரதிகளாக சமர்ப்பிக்க நடவடிக்கை



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற வருடாந்த அறிக்கைகளும் செயலாற்றுகை அறிக்கைகளும் அவற்றுக்கான மென் பிரதிகள் மூலம் தற்போது நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதோடு அந்த அறிக்கைகளின் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வன் பிரதிகளை மட்டும் தேவையைக் கருத்திற்கொண்டு உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காகவும் சபா மண்டபத்தில் மற்றும் நூலகத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (21) நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.


தாள்களுக்கான அதிக செலவு காரணமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து அறிக்கைகளையும் மென் பிரதிகளாக (Soft Copy) சமர்ப்பிப்பதற்கு கடந்த 2022.06.02 அன்று இடம்பெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்பிரகாரம், 2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான குழுநிலை விவாதம் நடத்தப்படுகின்ற காலப்பகுதியில் அந்தந்த அமைச்சுகள்/ நிறுவனங்களினால் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கைகளையும் மென் பிரதிகள் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு 2022.09.29ஆம் திகதி நடத்தப்பட்ட நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

அவ்வறிக்கைகளின் சில வன் பிரதிகளை உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காக சபா மண்டபத்தில் மற்றும் நூலகத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

# மிளகாய்த்தூளை வீசி நகைகள் அடங்கிய பெட்டி கொள்ளை

## அக்குரஸ்ஸவில் சம்பவம்



அக்குரஸ்ஸ நகரிலுள்ள நகைக்கடை ஒன்றுக்குச் சென்ற ஒருவர், நகைக் கடை உரிமையாளர் மீது மிளகாய்த்தூளை வீசிவிட்டு சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் அடங்கிய பெட்டியைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேக நபரை துரத்திச் சென்றபோதும் குறித்த நபர் மோட்டார்சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேக நபர் தங்க நகை விற்பனை நிலையத்தில் கொள்ளையடிப்பதற்கு முன்பு நகரில் நடமாடிய காட்சிகள் சிசிரிவி கமெராக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திகதி 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4945
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,295,550.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 0 3 3 9 2 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.48,175,264.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3187
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,728,320.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 03 07 16 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,959,399.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1400
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,599,780.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 3 1 9 7 6 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,950,434.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 975
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,113,820.00
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 42 44 64 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,813,396.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 254
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,679,080.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 34 36 38 41
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,089,077.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1293
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,885,420.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.281,127,566.00
L 01 07 12 13 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1292
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,443,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.280,948,750.00
C 17 19 60 62 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

2022-11-21 ஆம் திகதி மெகா பவர் 1292 ஆவது சீட்டிழுப்பின் முடிவு செய்தித் தாள்களில் வெளியான போது ஏற்பட்ட ஆங்கில எழுத்தின் பிழையை சரி செய்தல்

# மாவீரர் வாரம் நேற்று யாழில் ஆரம்பம்





## யாழ். பல்கலையில்....

மாவீரர் வாரம் நேற்று (21) ஆரம்பமாக வுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப் பதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்தன.

அந்தவகையில், பல்கலைக்கழக வளாகத் திலுள்ள மாவீரர் நினைவுத்தூபி பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத் தூபியைச் சுற்றி சிவப்பு, மஞ்சள் நிறத்திலான வர்ணக்கொடிகள் கட்டப்பட்டு மாவீரர் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் நிறை வடைந்துள்ளன.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று (21) ஆரம்பமாகியது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரைப் போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர் கள் நினைவாக, கார்த்திகை 27ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## பருத்தித்துறையில்..

மாவீரர் வாரம் நேற்று திங்கட்கிழமை ஆரம்ப மாகியுள்ள நிலையில், பருத்தித்துறை நீதிமன்ற வீதியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொது ஈகைச்சுடரை இரண்டு மா வீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்ததையடுத்து, மாவீரர்களுக்கு அக வணக்கம் செலுத்தி, தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் வரையில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# வவுனியாவில் 16 வயது தங்கையை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய சகோதரன் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா, பட்டக்காடு பகுதியில் 16 வயதுடைய தங்கையை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய சகோதரனை நெளுக்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தந்தையின்றி தாயின் அரவணைப்பில் சகோதரன், தங்கை இருவரும் வசித்துவந்த நிலையில் தனிமையிலிருந்த தங்கையை சகோதரன் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப் பட்ட முறைப்பாட்டையடுத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்குள் ளாக்கப்பட்ட சகோதரி மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் 26 வயதுடைய சகோதரனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# கிளிநொச்சி யுவதி நீரில் மூழ்கி உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் நீரில் மூழ்கி கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த யுவதியொருவர் நேற்று முன்தினம் (20) உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த ஆனந்தராஜா அலன்மேரி (வயது 18) எனும் யுவதியே உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியிலுள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு வந்த யுவதி மேலும் நால்வருடன் கடலில் நீராடியுள்ளார்.

பின்னர் கற்கோவளம் பகுதியிலுள்ள நீர்நிலை ஒன்றிலும் இறங்கி நீராடியுள்ளனர். அதன்போது, குறித்த யுவதி நீரில் மூழ்கி காணாமல்போன நிலையில், யுவதியுடன் கூட சென்றவர்கள் அவலக்குரல் எழுப்பியதையடுத்து அருகிலிருந்த இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அங்கு விரைந்து யுவதியை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசென்றனர். அங்கு யுவதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

# நயினை இளைஞர்கள் உட்பட 51 பேர் குருதிக் கொடை




(யாழ். நிருபர்)

நயினாதீவு மத்திய விளையாட்டுக்கழகத்தி னால் முதற்தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் நயினாதீவு பிரதேச வைத்திய சாலையில் நேற்று(21) சிறப்பாக இடம்பெற்றது.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த இரத்ததான முகாமானது, கனடாவில் வசிக்கும் புலம்பெயர் உறவான ஜெகநாதன் குடும்பத்தினரின் அனுசரணை யில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்ட குருதித் தட்டுப்பாட்டை கருத்திற் கொண்டு குறித்தபிரதேச இளைஞர்களின் ஒத்துழைப் புடன் வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட 51 குருதிக்கொடையாளர்கள் உயிர்காக்கும் இந்த உன்னத பணியில் பங்குகொண்டனர்.

# யாழ். போதனாவுக்கு புதிய இயந்திர உபகரணம்

(யாழ். நிருபர்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை கூடத்திற்காக புதிய இயந்திர உபகரணம் கடந்த வெள்ளிக்கிழமை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

எலும்பு முறிவு சத்திர சிகிச்சைப் பிரிவின் தேவைக்காக ஒன்பது இலட்சத்து எழுபத்தை யாயிரம் ரூபா (9,75,000) பெறுமதியான குறித்த உபகரணத்தை கொள்வனவு செய்ய தேவையான நிதியை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினால் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் யமுனானந்தாவிடம் கடந்த 17ஆம் திகதி கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பிறந்து 54நாட்கள் நிரம்பிய பெண் குழந்தை மரணம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி-கிராம்புவில் பகுதியைச் சேர்ந்த பிறந்து 54 நாட்களேயான பெண் சிசு ஒன்று நேற்று முன்தினம் (20) திடீர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்ட நிலையில், பெற்றோர் உடனடியாக வைத்திய சாலைக்கு அழைத்து வந்தபோதிலும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்திருப்பதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கிராம்புவில் சாவகச்சேரியைச் சேர்ந்த சுஜீபன் றேஷ்மி என்ற பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# டெங்கு பரவக்கூடிய சூழலில் சிரமதானப் பணி



(சாவகச்சேரி நிருபர்)

வலி. தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட டெங்கு நோய் பரவக்கூடிய இடங்களில் அண்மை யில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் குழாம், வலி. தெற்கு பிரதேச சபையுடன் இணைந்து குறித்த சிரமதானப் பணியினை முன்னெடுத்திருந்தது.

சிரமதான நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபைத் தவிசாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், காங்கேசன்துறை சாரணர் மாவட்ட கிளை சங்கச் செயலாளர் உள்ளிட்ட சாரண அணியினர் பங்குபற்றியிருந்தனர்.

# கொட்டகலை நகரில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்வோரை கைதுசெய்ய விசேட வேலைத்திட்டம்

(எஸ்.கணேசன்)

கொட்டகலை பிரதேசத்தில் உள்ள பிரதான பாடசாலைகளில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்து போதைக்கு அடிமையாகும் பாடசாலை மாணவர்களை மீட்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஷ்பா விஸ்வநாதன் மற்றும் நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் தலைமையில் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் இந்து ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் (20) மாலை இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தில் கொட்டகலை பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், மதகுருமார், வாகன சாரதிகள், கிராம சேவகர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட கொட்டகலையில் உள்ள பிரதான பாடசாலைகள் மற்றும் தோட்டப்புற பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமது பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் பெருமளவிலான மாணவர்கள் பல்வேறு போதைப்பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என கருத்துகளை பகிர்ந்தனர்.

இக்கலந்துரையாடலில், அவ்வாறான மாணவர்கள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு வகுப்புத்தடை விதித்து, அதற்கமைவாக, போதைப்பொருள் பாவனையிலிருந்து ஏனைய மாணவர்களை காப்பாற்ற, பெற்றோரின் ஆதரவுடன் திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பிரதான பாடசாலைகள் மற்றும் தோட்டப்புற பாடசாலைகளில் 6ஆம் ஆண்டு முதல் 11ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகளில் உள்ள மாணவர்களின் வருகைப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், அந்த மாணவர்களும் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக இதன்போது அதிபர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்தோடு, கொட்டகலை நகரில் உள்ள குறிப்பிட்ட சில மருந்துக் கடைகள் பாடசாலை மாணவர்களுக்கு போதை மருந்துகளை விற்பனை செய்வதாகவும், போதைப்பொருளை வாங்கிய பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வந்து மிக இரகசியமாக போதைப் பொருட்களை அருந்துவதாகவும் அதிபர்கள் இதன்போது மேலும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், இந்த போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மாணவர்களை விடுவிக்கவும், சமூகத்தை பாதுகாப்பதற்காகவும், அது தொடர்பாக ஆராய்வதற்கான குழுக்களை நியமிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஷ்பா விஷ்வநாதன் தெரிவித்ததோடு, போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்களை பற்றி பொலிஸாருக்கு தகவல்களை வழங்க பொது மக்கள் உதவி செய்ய வேண்டும் என நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தனது உரையில் கோரிக்கையை முன்வைத்தார்.





வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொட்டகலை பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் ஏற்பாட்டின் கீழ் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் கோவில் மண்டபத்தில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நடைபெற்றது. இதன்போது நுவரெலியா கல்வி வலயத்தின் உப பணிப்பாளர், கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர், உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (க.கிஷாந்தன்)



# பசறையில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

பசறை வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பின்தங்கிய 110 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பதுளை பிரன்லிசிப் அமைப்பின் தலைவர் எஸ்.யசோதராஜன் தலைமையில் பசறை தேசிய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக லண்டன் கிராமிய அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வி. கணேசமூர்த்தி, நலிவுற்றோர் நலன்காப்பு நிதியத்தின் செயலாளர் நாயகமும் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் செயலாளருமான செ.ராமகிருஷ்ணன், திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதித் தலைவரும் நிதிப் பணிப்பாளரும் மன்னார் நகரசபை உறுப்பினருமான சு.பிருந்தாபனநாதன், விசேட அதிதிகளாக வலயக்கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப்பணிப்பாளர் மோகனேஸ்வரன், இளம் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார், பசறை தேசிய கல்லூரி அதிபர் கே.எம்.சீ.பிரபாகரன் கோயில்குளம் GTM பாடசாலையின் தலைவரும் நலிவுற்றோர் நலன்காப்பு நிதியத்தின் உறுப்பினருமாகிய அ.சூரியகுமார், சமூக நலன்விரும்பிகளான ராஜ்குமார், பூபாலன் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா ரூபா 4000 பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கு லண்டன் கிராமிய அபிவிருத்தி அமைப்பு மற்றும் இலங்கை நலிவுற்றோர் நலன்காப்பு நிதியம் இணைந்து நிதி அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் பல சேவைகளைச் செய்து வரும் லண்டன் கிராமிய அபிவிருத்தி அமைப்பையும் பாராட்டி கௌரவித்தனர்.

இந் நிகழ்வினை பதுளை பிரன்லிசிப் அமைப்பினர் ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்குவளை பிராந்திய கல்வித்திறன் அபிவிருத்தி சபை அங்குரார்ப்பணம்



உக்குவளை நகரில் 'உக்குவளை பிராந்திய கல்வித்திறன் அபிவிருத்திச் சபை' எனும் பெயரில் அமைப்பொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

முன்னாள் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை அதிபரும் உக்குவளை மானாம்பொட ஜும்ஆ மஸ்ஜித் மற்றும் தக்கியா நிர்வாக பொருளாளருமான எம்.நிஸ்பரின் ஏற்பாட்டில் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற கூட்ட நிகழ்வில் அதிபர் நிஸ்பர் தலைமையில் பதினொருவரைக் கொண்ட செயற்கமிட்டியொன்று ஏற்படுத்தப்பட்டது.

இதுகுறித்து அதிபர் நிஸ்பர் தெரிவிக்கையில்,

உக்குவளை அஜ்மீர் பாடசாலையில் 1988இல் இதே பெயரில் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அதன்மூலம் இப்பாடசாலைக்குத் தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடிந்தாலும் தவிர்க்கமுடியாத காரணத்தால் அது செயல்படாதிருந்தது.

நீண்ட காலங்களுக்குப் பின்னர் இன்றைய தேவை கருதி அதேபெயரில் மீண்டும் அவ்வமைப்பை உயிரூட்டி செயற்பட வைக்குமுகமாக செயற்கமிட்டியொன்றை ஏற்படுத்தியுள்ளோம்.

இங்கு உக்குவளை பிரதேசத்தில் கற்றவர்கள் வைத்தியர்களாக, சட்டத்தரணிகளாக, துறை சார்ந்தவர்களாக பல இடங்களில் தற்போது பணிபுரிந்துவருவது குறித்து பெருமிதமடைகிறோம். அவர்கள் எல்லோரும் எமது ஊரின் வளங்கள் எனலாம்.

இச்சந்தர்ப்பத்தில் இப்பிரதேசத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் எமது தலையீடுகள் எதுவுமின்றி அதன் கல்வி வளர்ச்சியில் பங்களிப்பு செய்யும் வகையில் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தையும் நல்ல பழக்கவழக்கங்களையும் ஊக்குவிப்பதுடன், பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை நடத்தி அவர்களுக்குப் பரிசில்களை வழங்கும் திட்டங்களுடன் உக்குவளை நகரின் வளர்ச்சியில் காத்திரமான பணிகளை மேற்கொள்ளவும் இந்த அமைப்பினூடாக துறைசார்ந்தவர்களை இணைத்துக்கொண்டு ஏற்ற பணிகளை செய்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

எனவே, எமது எதிர்கால பணிகளை முன்னெடுத்துச் செல்ல சகலரும் ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புகிறோம் என்றார்.

# உலகச் சுற்றுலா கண்காட்சியில் இலங்கை பங்குபற்றுவதா? புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கை





லண்டனில் இடம்பெற்ற உலக சுற்றுலா் கண்காட்சியில் இலங்கை பங்குபற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்களால் எதிர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது.

லண்டனிலுள்ள உலக வர்த்தகச் சந்தையில் உலக சுற்றுலா கண்காட்சி ஒன்று அண்மையில் இடம்பெற்றது. குறித்த கண்காட்சியில் இலங்கையும் பங்குபற்றி சுற்றுலாத்துறையை விருத்திசெய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் பங்குபற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது லண்டன் வர்த்தக மைய பாதுகாப்புத் தரப்பினர் நிலைமையை கட்டுப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் சபாநாயகருடன் சந்திப்பு







கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் வூஜின் ஜியோங் (Woonjin Jeong) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் அண்மையில் (17) சந்தித்தார்.

கொரிய சீமோல் அமைப்பின் தலைவர் லீ ஸோங் ஜொங் மற்றும் சீமோல் அமைப்பின் இலங்கைப் பணிப்பாளர் சோய் சுங் வூ ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சீமோல் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் விவசாய உற்பத்திகளை விருத்திசெய்தல், கிராமிய மக்களை வலுப்படுத்தல் போன்ற சமூக அடிப்படையிலான திட்டங்கள் தொடர்பில் சீமோல் அமைப்பின் தலைவர் சபாநாயகருக்கு விளக்கமளித்தார்.

அதற்கமைய, விவசாயம் உள்ளிட்ட ஏனைய துறைகளிலான அபிவிருத்திகள் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை விருத்தி செய்துகொள்ளக்கூடிய முறை தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தும் கலந்துகொண்டார்.

# சாட்டி கடற்கரையில் மாவீரர் நாள் நினைவேந்தல் ஆரம்பம்





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், நேற்றையதினம் சாட்டி கடற்கரையில் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது அரசியல் பிரமுகர்கள், மாவீரர்களின் உறவினர்கள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



**அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அச்செழு பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த 29 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் (20) காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.**

**இதன்போது அவரிடமிருந்து 20 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா, 7 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன.**







**உலக மீனவர் தினத்தை முன்னிட்டு உடப்பு கரைவலை சம்மாட்டிமார்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் நேற்று (21) இடம்பெற்றது. இதன்போது, மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்படு கலந்தாலோசிக்கப்பட்டது. அத்துடன், அண்மையில் கரைவலைக்குச் சென்ற தொழிலாளர் ஒருவர் மின்னல் தாக்கியதில் மரணமடைந்தார். அது சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் மீனவர்களின் பாதுகாப்பு நடவடிக்கையும் முன்வைக்கப்பட்டு பேசப்பட்டது. மேலும், மீனவர்களில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பத்தின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதில் புத்தளம் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் இ.எம்.சி.போயகொட ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபையின் தலைவர் க.தெட்சணாமூர்த்தி, வைரப்பன், க.ஜெயக்காந்தன் மற்றும் கரைவலை சம்மாட்டிமார் கலந்துகொண்டனர்.**

**(உடப்புசெய்தியாளர்)**

# பழுனுகமவில் சகோதரிகள் இருவர் துஷ்பிரயோகம்

## சந்தேகநபரை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை

**(ஹேமந்த லியனபத்திரண)**

கந்தானை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் தொடர்பான பிரிவின் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகரின் மகள்கள் இருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த அந்த அதிகாரியின் காதல் கணவனை கைது செய்வதற்கான விசாரணைகளை பமுனுகம பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பிரதான பொலிஸ் பரிசோதகரின் கணவர், சிறைச்சாலை காவலராக இருந்து தற்போது போதைப்பொருள் குற்றச்சாட்டில் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுமிகள் இருவரும் 12 மற்றும் 07 வயதுடையவர்கள் என்பதுடன், அதிகாரியின் மூத்தமகள் தனக்கு இடம்பெற்ற அநீதி குறித்து தந்தையின் உறவினர்களுக்கு தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்தச் சம்பவம் தொடர்பில் உறவினர்கன் தும்மலசூரிய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். முறைப்பாட்டின் பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமிகள் இருவரும் மருத்துவ பரிசோதனைகளுக்காக சட்ட வைத்திய ஆலோசகரிடம் ஒப்படைக்கப்பட்டுளளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பாகிஸ்தான் - இலங்கை ஆயுதப் படைகளின் பாதுகாப்பு உரையாடல்







**(அஷ்ரப் ஏ சமத்)**

2022 நவம்பர் 16-17 வரை கராச்சி எக்ஸ்போ நிலையத்தில் மூன்றாவது சுற்று பாகிஸ்தான் - இலங்கை ஆயுதப் படைகளின் பாதுகாப்பு உரையாடல் நடைபெற்றது. பாகிஸ்தான் தூதுக்குழுவிற்கு பாதுகாப்புச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு நிலை) ஹமூத் உஸ் ஜமான் கான் தலைமை தாங்கியதோடு, இலங்கை தூதுக்குழுவிற்கு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் (ஓய்வு நிலை) கமல் குணரத்ன தலைமை தாங்கினார். இதன்போது, பாகிஸ்தானும் இலங்கையும் இருதரப்பு இராணுவ உறவுகளின் தற்போதைய நோக்கத்தை மதிப்பாய்வு செய்ததோடு ஆயுதப்படை பாதுகாப்பு உரையாடலின் கீழ் அடையப்பட்ட முன்னேற்றம் குறித்தும் திருப்தியை வெளிப்படுத்தின. பிராந்திய பாதுகாப்பு மற்றும் முன்னோக்கியிருக்கும் சவால்கள் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர். அனைத்து பிராந்திய மற்றும் சர்வதேச அரங்குகளிலும் பாகிஸ்தானும் இலங்கையும் பரஸ்பரம் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராணுவப் பயிற்சி, கூட்டுப் பயிற்சிகள், உயர்மட்ட வருகைகள் தொடரும் எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இறுதியில், 2023ஆம் ஆண்டு ஆயுதப்படைகளின் பாதுகாப்பு உரையாடலின் அடுத்த கூட்டம் இலங்கையில் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரதிநிதிகள் குழு கராச்சியில் நடைபெற்றுவரும் டிஃபென்ஸ் எக்ஸ்போ ஐடியாஸ்-22 கண்காட்சியை பார்வையிட்டதோடு, பல்வேறு பங்குதாரர்களுடனும் கலந்துரையாடியது. உயர்மட்ட பாதுகாப்பு தூதுக்குழு, பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர், பாதுகாப்பு உற்பத்திச் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் கூட்டுப் பணியாளர்கள் குழுவின் தலைவர் ஆகியோரையும் சந்தித்தது.

## @rrhrs msL mfdq- E bhkshdr mc E bhkshdr Neehbdq-

@qplot sdc dct b shnmhmrshst sd hmRqhK mj -

**d d t qpll dmsr – rrrs ms mfdq– sdr-**

- Sn l mfdsgd vnqj oqnbdrr mc rtodqulhrd kk ntsrnt qbdc rdqulbdr-
- Sn l mfdsgd ot qpg rhmf neoqpll hrdr, e bhkshdr qplk sdc sn fnncr mc rdqulbdr mc l mfhmf sgd dmshqd ot qpg rd nqcdqoqnbdrr qplk sdc sn oqpll hrdr. e bhkshdr-
- Cd kvhsg c x- sn- c x nodq shnmr qplk sdc sn rdbt qhsx & gd ksg mc r edsx neneehbdqr-
- Nudqrdd sgd oqplo q shnm, dwsdmr hnm, l dmcl dms nekd rd f qplldl dmsr enqoqnulhcdc rs eeqplr hcdmbdr. neehbd oqpll hrdr, kh hrhmf vhsg kdf koqnedrrhnm kr. cdrhfm sdc hmsdqm kneehbdqr-
- @rrhrs hmsgd oqplo q shnmnecdrhfm sdc r edsx, rdbt qhsx, bnmshmt hsx ok mr hmbkt chmf qpluhdv hmf mc sdrshmf hmklmd vhsg ftlhcdklmdr. rs mc qpr-

**mcc sd Oqne d- rrrs ms mfdq– sdr-**

- FBD (@ K) nq mdpt hu kdms pt khehb shnm
- L hmh tl , ehud xd qr ne vnqj dwodqhdmbd hm oqpll hrdr mc E bhkshdr l mfdl dms nq qplk sdc vnqj chrbhokhmd-
- Dwsdmrhud g mcr- nmdwodqhdmbd hm bbntmshmf oqnbt qpll dms, neehbd rnes-v qpl, bnl l tmhb shnm rnes-v qpl o bj fdr-
- G mcr nmsdbgmhb kvnqj dwodqhdmbd qplk sdc sn oqpll hrdr mc e bhkshdr l mfdl dms etmbshnmr (cdrhq akd)-

**d d t qpll dmsr – sdr ee dq**

- Dwodqhdmbd hme bhkshdr. oqpll hrdr l mfdl dms nqqplk sdc vnqj qpl r-

**mcc sd Oqne d- sdr ee dq-**

- @ssdmc sn nodq shnm khrrtdr hmunkuhmf oqpll hrdr & dpt hol dms l hmsdm mbd
- G mckd ot qpg rd nqcdq oqnbdrr qplk sdc sn oqnbt qpll dms

hhsdqdr sdc b mchc sdr b m ookx ax rdmchmf sgdhq BUr sn qplbqt hsl dmsabnmmdbsdc fl hkbnl
Bnms bst r nm+83 665 260 023 +83 666217 012-Mn9/6,
Rj dkenmF qpdmr,
Bnknl an /4

## OnrsneQdrd qpg @rrhrs msr

- hhr shst shnme9T mhudq hsx neBnknl an
- Dct b shnm kPt khehb shnme9Cdf qpld
- Jdx Qdpt hqpll dmsr9Fnnc @cl hmhrsq shud rj hkkr, Dwbdkkdms bnl l mc ne ronj dm mc v qhssdm Dmf khrg
- @ookx9gssor9. enq r-fkd. JUbj bA LT2nwmu1F6

## Fdmdq kL mfdq

## V qpgntrd L mfdq

## L mfdl dms @rrhrs msr

## Neehbd Vnqj dq

L nqpl hhend shnme9O kt f l l L mctqM u fhqh L OBR- /54 1/46218

## OnrsneSdl onq qx Qdrd qpg @rrhrs ms

- hhr shst shnme9T mhudq hsx nel eem
- Pt khehb shnme9@ A rhb Cdf qpld
- Bknrhmf C sd92/sg Mnudl adq 1/11
- R k qx938,75/-// OL
- @ookx9enl u b mbx t mhu-iem- b-kj nm

## GQ L mfdq

- Pt khehb shnme9Cdf qpld hmGQL, L hmh tl /4 d qr neDwodqhdmbd
- @ookx9hmen inae bsnqx-kj /004816612
- B kkBdmsdq Dwdbt shud
- hhr shst shnme9l u hhr shst sd
- @f d Kh ls907-24
- Fnnc Bnl l tmhb shnmrj hkkr mddcdc-
- @ookx9bdqpldq-i u hmrshst sd fl hkbnl

# புறா தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஆளுநர் உத்தரவு





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, நிலாவெளி புறா தீவு சுற்றுலாப் பகுதிக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை துரிதப்படுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுற்றுலாப் பிரதேசத்தைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்தபட்ச வசதிகள் இல்லை என தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைப் பரிசீலித்த ஆளுநர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலா வலயங்களில் அமைந்துள்ள ஹோட்டல் உரிமையாளர்களுடன் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புறா தீவை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளிடம் படகு உரிமையாளர்கள் பணம் வசூலிப்பதும், அதற்கு கட்டுப்பாடு இல்லை என்பதும் தெரியவந்தது.

அப்பகுதிக்குப் பொறுப்பான வனவிலங்கு அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட படகுகள் மட்டுமே அங்கு போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

பதிவுசெய்யப்படாத படகுகளில் பயணம் செய்யக்கூடாது என்ற அறிவிப்புப் பலகைகளை அப்பகுதியில் எச்சரிக்கை விடுக்குமாறு மாவட்ட வனவிலங்கு அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

இதனிடையே, உடனடியாக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைக்குமாறு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சித் தலைவர்களுக்கு ஆளுநர் உத்தரவிட்டார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களின் தூய்மை மற்றும் சுகாதார வசதிகள் குறித்து ஆய்வுசெய்ய புதுப்பிக்கப்பட்ட திட்டத்தைத் தயாரிக்கவும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஹரி பிரதாப், திருகோணமலை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரம்மனகே, திருகோணமலை, நகர மற்றும் மற்றும் குச்சவெளி உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், கரையோர பாதுகாப்புத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கலால் திணைக்களம், இலங்கை கடற்படை, பெருமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மண்முனை தென்எருவில்பற்றில் கலாசார இலக்கிய விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

(பெரியநீலாவணை நிருபர்)

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகம், கலாசாரப் பேரவை, கலாசார அதிகாரசபை என்பன ஒன்றிணைந்து நடத்தும் 'கலாசார இலக்கிய விழா – 2022' இன்று (22) பிற்பகல் 2.00 மணிக்கு மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் எவ்.பாரதி கென்னடி, கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஆன்மீக அதிதிகளாக களுதாவளை ஸ்ரீ சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பிரதம குரு வண.சிவஸ்ரீ வி.ஸ்ரீஸ்கந்தராசா குருக்கள், களுதாவளை




மெதடிஸ்த தேவாலயத்தின் வண.அருட். டானியேல் அருள்ராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

களுதாவளை பிரதான வீதியில் பண்பாட்டுப் பவனியுடன் ஆரம்பிக்கப்பட்டு களுதாவளை தேசிய பாடசாலை மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தோடு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் நாட்டிய நாடகம், கலை கலாசார நிகழ்வுகளென பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன. நிகழ்வின்போது எழுவான் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருகோணமலை சிறைச்சாலையின் புதிய பிரதான ஜெயிலராக மோகனராஜா கடமைகளைப் பொறுப்பேற்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சிறைச்சாலையின் புதிய பிரதான ஜெயிலராக ஆர்.மோகனராஜா நேற்று (21) உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சிறைச்சாலையின் பிரதான ஜெயிலராக கடமையாற்றிய சம்பத் ஜெயவர்தன அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜா நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பிரதான ஜெயிலராக கடமையாற்றி ஆர்.மோகனராஜா திருகோணமலை சிறைச்சாலையின் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.



இவர் பொலன்னறுவை சிறைச்சாலையிலும் பிரதான ஜெயிலராக கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் புதிய நிர்வாக சபை

(மண்முனை நிருபர்)

கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் (20) மட்டக்களப்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் எ.பிரியகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.





புதிய நிர்வாகத் தெரிவின்போது சங்கத்தின் தலைவராக மீண்டும் எ.பிரியகாந்தன் தெரிவு செய்யப்பட்டதுடன். செயலாளராக நிரஞ்சன், உப தலைவராக வா.ச.ஜெகநாதன், உதவிச் செயலாளர் பி.பிரமிதன், பொருளாளர் க.சண்முகநாதன், நிர்வாகச் செயலாளர் இ. நாகலிங்கம், பிரசாரச் செயலாளர் அ.ரமணன், உதவிப் பொருளாளர் ம.மகேந்திரராசா மேலும் உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் ஆசிரியர்கள் நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பாகவும் தலைவர் தலைமையிலான உறுப்பினர்களால் கலந்துரையாடப்பட்டது.






22ஆவது பீபா உலகக்கிண்ணத் தொடர் நேற்று முன்தினம் கட்டாரில் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வுகள் இஸ்லாமிய பாரம்பரிய முறைப்படி அல்-பைத் அரங்கில் ஏராளமான ரசிகர்கள் முன்னிலையில் அரங்கேறியது.

# 12 வருடங்களின் பின் மீண்டும் ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்திய சௌதி

இந்திய அணிக்கு எதிராக நேற்று முன்தினம் மவுண்ட் மவுங்கனியில் நடைபெற்ற 2ஆவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் டிம் சௌதி ஹெட்ரிக் விக்கெட் எடுத்து சாதனை படைத்தார்.



இன்னிங்ஸின் கடைசி ஓவரை வீசிய டிம் சௌதி, இந்திய அணியின் கேப்டன் ஹார்திக் பாண்டியா, தீபக் ஹூடா மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்தார். இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் டிம் சௌதி எடுத்த 2ஆவது ஹெட்ரிக் இதுவாகும். இதற்கு முன்னதாக கடந்த 2010ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தியிருந்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# பீபா உலகக்கிண்ண வரலாற்றில் மோசமான சாதனை படைத்த கட்டார்

**22ஆவது** பீபா உலகக்கிண்ணத் தொடர் நேற்று முன்தினம் கட்டாரில் மிக விமரிசையாக ஆரம்பமானது. ஆரம்ப போட்டியில் குழு 'ஏ'யில் இடம்பெற்றுள்ள தொடரை நடத்தும் கட்டார் - ஈக்வடோர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் 16ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி ஈக்வடோர் அணியின் தலைவர் வாலென்சியா முதல் கோல் அடித்தார். மீண்டும் ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் 2ஆவது கோல் அடித்தார் வாலென்சியா. 2-0 என ஈகுவடார் முன்னிலை வகித்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிந்தது.



ஆட்டத்தின் இரண்டாம் பாதியில் இரு அணிகளுமே கோல் அடிக்கவில்லை. எனவே, 2-0 என்ற கோல் கணக்கில் கட்டாரை வீழ்த்தி ஈக்வடோர் அணி அபார வெற்றி பெற்றது.

பீபா உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் நாட்டின் அணிதான் முதல் போட்டியில் ஆடும். அப்படி நடத்திய எந்த அணியும் முதல் போட்டியில் தோற்றதில்லை.

92 ஆண்டுகால பீபா உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக தொடரை நடத்தும் கட்டார் அணி முதல் போட்டியில் தோற்று மோசமான வரலாற்றுச் சாதனையை பதிவு செய்தது.

# சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் வி.கழகம் வெற்றிபெற்று FFSL GOLD CUP சுற்றுப்போட்டிக்குத் தெரிவு



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை மசூர் மௌலானா மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை நடைபெற்ற இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் FFSL GOLD CUP சுற்றுப்போட்டியில் சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் வி.கழகம் மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடி வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளது.

அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் FFSL GOLD CUP முன்னணி கழகமான மருதமுனை எவரடி விளையாட்டுக் கழகத்துடன் சாய்ந்தமருது ஹோலி ஹீரோஸ் வி.கழக வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி, 1:1 என்ற ரீதியில் சமநிலையில் முடிவடைந்தது. எனினும், பெனாட்டி உதை மூலம் 3:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றுள்ளது.



கண்டி உடத்தலவின்ன ஜாமியுல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் பழைய மாணவர்களுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரில் 2005 ஜாமியன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

# அம்பாறை மாவட்டத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளால் நெல்லுற்பத்தியில் போகத்துக்கு ரூ. 3.1 பில்லியன் இழப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் சுட்டிக்காட்டு

(கே.எ.ஹமீட்)

2006 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வெவ்வேறு வர்த்தமானி அறிவித்தல்களினால் அம்பாறை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாயக் காணிகள் வனப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டன.

இதனால் பல விவசாயிகள் வருமானம் இழந்துள்ளதோடு, நாட்டின் உள்ளூர் உற்பத்தியில் பங்களிப்புச்செய்யும் நெல்லுற்பத்தியில் ஒவ்வொரு போகத்திற்கும் 3.1 பில்லியன் ரூபாவை அம்பாறை மாவட்டம் இழந்து நிற்கிறது.

இந்த வர்த்தமானிகள் மீளப்பெறப்பட்டு அல்லது அவை திருத்தம் செய்யப்பட்டு விவசாய நிலங்களை காணி உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டும் எனவும் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் 38 காணிப் பிரச்சினைகள் தொடர்பான ஏனைய சில கோரிக்கைகளையும் உள்ளடக்கியதாக



சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் சமர்ப்பித்திருந்தார்.

பிரேரணை சமர்ப்பித்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி முஷாரப், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் 38 காணிப் பிரச்சினைகளையும் தொட்டுப்பேசினார்.

அவர் பேசுகையில், "அம்பாறை மாவட்டத்தின் விவசாயச் செய்கை தேசியத்தின் 22 வீதமான விவசாயச் செய்கைக்குப் பங்களிப்பு நல்குகிறது. சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பு செய்கையில் இன்னும் தேசிய விவசாய உற்பத்தியை ஓங்கச் செய்யலாம். காணி உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தாமலே பல காணிகள் சுவீகரிப்பு செய்யப்பட்டுள்ளன.

குறித்த காணிப் பிணக்குகளில் 4,652 காணிச் சொந்தக்காரர்களுக்கு சொந்தமான 14,127ஏக்கர் காணிகள் இதுவரையும் காடுகளுக்குரிய எந்த அம்சங்களுமின்றி வயல் செய்கின்ற காணிகளாக வரப்புகளோடும் வாய்க்கால்களோடும் தொன்றுதொட்டு இருந்துவருகின்றன. இதை மிகவும் உணர்வுபூர்வமாகப் பார்க்க வேண்டும். எந்தவிதமான காரணங்களுமின்றி விவசாயிகளை அவர்களின் சொந்த காணிக்குள் செல்ல முடியாமல் பண்ணியுள்ளமை தாயையும் பிள்ளையையும் பிரிப்பதுபோல் அவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் செயற்பாடாகும்.

இவ்வாறு அரச திணைக்களங்களால் சுவீகரிக்கப் பட்டுள்ள காணிகளால், போகமொன்றிற்கு 3.1 பில்லியன் ரூபா தேசிய நெல்லுற்பத்தியில் இழக்கப்படுகின்றன. குறித்த காணிகளை விடுவிப்பு செய்ய LLRC ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு, Easter Provincial Panel of Expert on Social Injustice போன்ற ஆணைக்குழுக்கள் சிபாரிசு செய்தும் கூட இன்னும் விடுவிப்பு செய்யவில்லை. எனவே, நாட்டின் பொருளாதாரத்தையும் உள்ளூர் உற்பத்திகளையும் பெருக்குவதற்காக குறித்த காணிகள் விடுவிப்பு செய்யப்பட வேண்டும்'' - என்றார்.

## உயிரிழந்த நிலையில் மூதூரில் யானை மீட்பு



(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் (20) இறந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டது.

நல்லூர் கிராமத்தில் காட்டுப்பகுதியில் இந்த யானை இறந்த நிலையில் காணப் பட்டதை அவதானித்த அப்பகுதி மக்கள் வனத்துறை அதிகாரிகளுக்கும் சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அறிவித்த நிலையில், அந்த இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டதுடன், யானையின் இறப்பு தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நோய்களைக் கூறும் ஜனாதிபதி ரணில் அதற்கான மருந்துகளைக் கூற மறந்துவிட்டார்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சாடல்



(கந்தளாய் நிருபர்)

எமது நாட்டின் தற்போதைய அரசியல் நிலமைகளைப் பார்க்கின்றபோது இது கனவா அல்லது நனவா என்ற சந்தேகம் உருவாகிறது. ஏனென்றால், இந்த நாடாளுமன்றில் தற்போது இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நல்லாட்சிக் காலத்தில் விமர்சித்தவர்கள் இன்று அவரைப் புகழ்ந்துகொண்டிருப்பதையும், அவருடைய வரவு-செலவுத் திட்டத்தை மிகவும் வரவேற்கும் நிலைப்பாட்டில் பேசுகின்றதையும் பார்க்கின்றபோது இந்தச் சந்தேகம் வருவதாகவும், சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையை பார்க்கின்றபோது நோயாளிக்கு நோய்களைக் கூறும் ஜனாதிபதி ரணில் அதற்கான மருந்துகளைக் கூற மறந்துவிட்ட நிலை காணப்படுவதாக வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.


மேலும் அவர் தெரிவிக்கையில்,

இப்படியான பல வரவு-செலவுத் திட்டங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம், அதேபோன்று இது நடைமுறைக்கு சாத்தியமா என்பதையும் கேட்க விரும்புகிறோம். ஜனாதிபதி வாசித்த இந்த அறிக்கை ஜோசியக்காரன் சொல்வது போன்று அல்லது வானிலை அறிக்கை போன்றே காணப்பட்டதே தவிர, பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்த பொருளாதாரக் கொள்கையை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உள்ளவர். ஆனால், அரசாங்கத்தில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை எதிர்க்கும் நிலைப்பாட்டில் காணப்படுகிறார்கள். அவ்வாறிருக்க, இவர்களால் ஒன்றாக இணைந்து இந்தப் பயணத்தை எடுத்துச்செல்ல முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

அதேபோன்று, தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்படி அந்த நிதியாண்டுக்கான பற்றாக்குறை ரூபா 2,404 பில்லியன், மொத்தச் செலவு சுமார் ரூபா 5,819 பில்லியனாகும். எமது நாட்டின் நிலைமைகளை கருத்திற்கொண்டு அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் எனவும், பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய அமைச்சுகளுக்குப் போதுமான நிதிகள் ஒதுக்கப்படவில்லை எனவும் விமர்சனங்களை முன்வைத்தார்.

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாலத்தோப்பூரிலிருந்து தோப்பூர் வரையுள்ள பிரதான வீதி செப்பனிடும் வேலை நிறுத்தப்பட்டு ஆறு மாதங்கள் கடந்தும் எஞ்சிய வீதியை செப்பனிடாததன் காரணமாக இவ்வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் நீர்த் தேங்கி நின்று வீதியால் பாதசாரிகள் பயணிக்க முடியாதுள்ளதாகவும், மோட்டார்சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் பயணிப்போருக்கு நீண்டநேரம் எடுப்பதாகவும் வாகனங்கள் அடிக்கடி சேதமடைவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சம்மாந்துறை பிரதேச சபையினால் இலவச கொரியமொழி பயிற்சிநெறி



(மாளிகைக்காடு நிருபர்)

இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் சம்மாந்துறை பிரதேச சபையினால் நடத்தும் இலவச கொரிய மொழி பயிற்சி பாடநெறி அங்குராப்பண நிகழ்வு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.முஹம்மட் நௌசாட்டின் தலைமையில் அமீர் அலி பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட்டின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை பிரதேச சபை உப தவிசாளர் ஏ.அச்சு முகம்மட், பிரதேச சபை உறுப்பினர்களான யூ.எல்.அஸ்பர், என்.கோவிந்தசாமி, ஏ.எம்.எம்.றியாஸ், எம்.எஸ்.சீபா, கொரிய மொழி போதனாசிரியர் வை.வீ.எம்.நபாஸ், அமீர் அலி பொது நூலக நூலகர் ஏ.ஆர்.எம்.இல்யாஸ், பிரதேச சபையின் கொரிய மொழி பயிற்சிநெறிக்கான இணைப்பாளர் ஐ.எல்.சப்றி, பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மாணவர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தேசிய ரீதியில் கலைஞர்களின் தகவல்களைத் திரட்டி இலத்திரனியல் அடையாள அட்டை வழங்க நடவடிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது, கலைஞர்களின் தரவுத்தளத்தை ஸ்தாபித்தலும் இற்றைப்படுத்தலும் மூலம் செயற்படுத்தப்படும் கலைஞர்களுக்கான ஒரு தரவுத்தளத்தை ஸ்தாபித்தல் மற்றும் இற்றைப்படுத்தல் பற்றிய கருத்திட்டத்தின் கீழ் கலைஞர்களை ஒன்லைன் (Online) ஊடாக பதிவுசெய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய ரீதியில் கலைஞர்களின் தகவல்களை திரட்டும் நோக்கில் தரவுத்தளம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. அதனை www.heritagemgiv.lk எனும் இணையத்தளம் ஊடாக அல்லது My Heritage எனும் Mobile Application மூலமாக கலைஞர்கள் தாங்களாகவே பதிவுசெய்துகொள்ள முடியும். அதற்கான விளம்பர சுவரொட்டிகள் இறக்காமம்



உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் தலைமையில் கலாசாரப் பிரிவு விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ்.ஜமீல் காரியப்பர் மற்றும் இறக்காமம் பொது நூலகம், கிராமசேவை உத்தியோகத்தர்கள், கலை மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கலாசார உத்தியோகத்தர்களான எம்.ஏ.நௌபீஸா, ஏ.எல்.பரீனா மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப் ஆகியோரினால் வழங்கப்பட்டன.

பதிவுசெய்துகொள்ளும் கலைஞர்களுக்கு இலத்திரனியல் அடையாள அட்டைகள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும். இதனூடாக சந்தை வாய்ப்புகளும் உருவாகும். கலை ஆக்கங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் கலைஞர்களின் கலை சார்ந்த தொழிலை பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும்.

# கந்தளாயில் ஒன்பது பவுண் தங்க நகைகள் திருட்டு

## சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராறு பகுதியில் பட்டப்பகுதியில் ஒன்பது பவுண் தங்க நகைகளை திருடிய குற்றச்செயலுடன் தொடர்புடையதாக தெரிவித்து சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவரை நேற்று (21) காலை கைதுசெய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் அணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரையே கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேராறு, அணைக்கட்டு பகுதியிலுள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து ஒன்பது பவுண் தங்க நகைகள் மற்றும் பணம் நேற்று முன்தினம் (20) பகல்வேளையில் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டு உரிமையாளரான ஆசிரியர் வெளியில் சென்றதன் பின்பு ஜன்னல் வழியாக வீட்டுக்குள் புகுந்து சந்தேகநபர் கைவரிசையை காட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டு உரிமையாளர் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகத்தின்பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# போடியார் புலம்பல்!



***தமிழ்க் கட்சிகளெல்லாம் ஒன்றிணைவது காலத்தின் தேவையாம் எண்டு பல தமிழ்த் தலைவர்கள் சொல்லுறாங்க எலுவா..?***

***அடே நாசமறுப்பானுகளே, அப்ப 2010இற்கு புறகு ஒன்றாக இருந்து பத்து கட்சியாக பிரியக்குள உங்கட காலம் எங்கடாப்பா போனது.***

***கேக்கிறவன் கேணயன் எண்டா எருமை மாடும் ஏறப்பிளேன் ஓடும் எண்டமாதிரித்தான் ஒங்கட கூத்து.***

# தன்னாமுனை இராசையா வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைப்பு




(வெல்லாவெளி நிருபர்)

ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச சபையின் உறுப்பினர் வேலாயுதம் புவிதாசனின் வேண்டுகோளுக்கிணங்க போக்குவரத்து செய்ய முடியாமல் காணப்பட்ட தன்னாமுனை வீதி கொங்றீட் வீதியாக மீள் புனரமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நீண்டகாலமாக போக்குவரத்து செய்யமுடியாமல் மோசமான நிலையில் காணப்பட்ட ஏறாவூர், தன்னாமுனைக் கிராமத்தில் இராசையா வீதியை கொங்கிறீட் வீதியாக புனரமைக்கும் வேலைத்திட்டம் ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபையின் உறுப்பினர் வேலாயுதம் புவிதாசனின் வேண்டுகோளுக்கிணங்க பிரதேச சபையின் வருடாந்த பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் குறித்த வீதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (20) தன்னாமுனை கிராமத்திற்கான வட்டார சபை உறுப்பினர் வேலாயுதம் புவிதாசனின் தலைமையில் இடம்பெற்றது.





***கல்முனை ஆதார வைத்தியசாலையால் நீரிழிவு தின விழிப்புணர்வாக சைக்கிளில் சவாரி செய்யும் நிகழ்வு வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் வைத்தியசாலை ஊழியர்கள், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.***

***( பாண்டிருப்பு நிருபர் )***






# இந்தோனேஷியாவை உலுக்கிய பாரிய நிலநடுக்கம்

## ரிச்டர் அளவில் 5.6ஆகப் பதிவு: 61 பேர் பலி; 700 பேர் படுகாயம்!











இந்தோனேஷியாவின் ஜாவா மாகாணத்தில் நேற்று 5.6 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் 61இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 700இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் ஜகார்த்தாவிலும் நில அதிர்வுகள் உணரப்பட்டதால் பீதியடைந்த மக்கள் உடனடியாக வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

ஜாவா மாகாணத்தின் சியாஞ்சுர் நகரில், பூமிக்கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.6ஆக பதிவாயுள்ளதாக அந்நாட்டு புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால், கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இடிபாடுகளில் சிக்கி 700இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், 61இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்தும் அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்றுவருவதுடன், காயமடைந்தோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில நடுக்கம் ஏற்பட்டபோது, மக்கள் பதறியடித்துக்கொண்டு பீதியுடன் வீதிகளுக்கு ஓடி வந்தனர். பலர் திறந்தவெளிகளுக்கும், மைதானங்களுக்கும் பதற்றத்துடன், அலறியடித்துக்கொண்டு ஓடினர். சியாஞ்சுர் நகரம் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிலநடுக்கத்தால் அங்கு பல இடங்களில் மின்சாரம் தடைபட்டுள்ளதுடன், ஏராளமான வீடுகள் இருளில் மூழ்கியுள்ளதால் பொதுமக்கள் தவித்து வருகின்றனர். கட்டடங்கள் பல இடிந்து தரை மட்டமாகினயுள்ளதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### ராஜீவ் கொலை வழக்கு விவகாரம்

# நளினி உட்பட அறுவர் விடுதலையை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் உச்சநீதிமன்றில் மறுசீராய்வு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய நளினி உள்ளிட்ட 6 பேர் விடுதலையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு சீராய்வு மனு தாக்கல் செய்த நிலையில், தற்போது காங்கிரஸ் கட்சித் தரப்பிலும் மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**நளினி உள்ளிட்டோர் விடுதலை**

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்து 41 பேரை கைதுசெய்தது. பூந்தமல்லி சிறப்பு தடா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்தபோது 15 பேர் இறந்துவிட்டனர். எஞ்சிய 26 பேருக்கும் தூக்குத்தண்டனை விதித்து நீதிமன்றம் கடந்த 1998ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. இந்தத் தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இதில் 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர். நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 4 பேருக்கு மட்டும் உச்ச நீதிமன்றம் தூக்குத்தண்டனையை உறுதிசெய்தது. ரொபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய 3 பேரின் தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. பின்னர் தமிழக அரசின் பரிந்துரையின்பேரில் நளினியின் மரணதண்டனையை ஆயுள்தண்டனையாகக் குறைத்து ஆளுநர் உத்தரவிட்டார். தொடர்ந்து எஞ்சிய 3 பேரின் தண்டனையையும் ஆயுள்தண்டனையாகக் குறைத்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து 7 பேரும் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கிடையே பேறறிவாளன் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த மே மாதம் 18ஆம் திகதி அவரை விடுதலைசெய்து உத்தரவிட்டது. பேரறிவாளன் விடுதலையை அடிப்படையாகக்கொண்டு எங்களையும் விடுதலைசெய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நளினியும், ரவிச்சந்திரனும் முறையிட்டனர்.

அதை விசாரித்த நீதிமன்றம் கடந்த ஜூலை 17ஆம் திகதி தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பில் பேறறிவாளனை உச்சநீதிமன்றம் அதன் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவித்துள்ளது. அந்த சிறப்பு அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு இல்லை. எனவே, இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என தெரிவித்தது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக இருவரும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.



முருகன் சாந்தன் நளினி

ராபர்ட் பயஸ் ரவிச்சந்திரன் ஜெயக்குமார்

இந்த மேன்முறையீட்டு மனுக்களில் தங்களையும் இணைக்கக் கோரி மற்ற 4 பேர் சார்பிலும் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதிகள் பி.ஆர்.கவாய், நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு கடந்த 11ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது நீதிபதிகள் 6 பேரையும் விடுதலைசெய்து பரபரப்பு தீர்ப்பளித்தனர்.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், பேறறிவாளனை விடுவித்து உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு இந்த 6 பேருக்கும் பொருந்தும். மேலும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் விதிக்கப்பட்ட தண்டனையை இந்த மனுதாரர்கள் அனுபவித்து விட்டனர். எனவே, மனுதாரர்களை வேறொரு வழக்கில் தேவைப்படாமல் இருக்கும் பட்சத்தில் உடனடியாக விடுவிக்க உத்தரவிடுகிறோம் எனத் தெரிவித்தனர்.

**ஆதரவும் எதிர்ப்பும்**

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு ஆதரவும், எதிர்ப்பும் கிளம்பியது. தமிழகத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியைத் தவிர, தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் தீர்ப்பை வரவேற்றன.

6 பேரில் நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் ஏற்கனவே பரோலில் இருந்தனர். ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகிய 2 பேர் புழல் சிறையிலும், சாந்தன், முருகன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். உச்ச நீதிமன்ற தீர்ப்பையடுத்து அவர்கள் 6 பேரும் மறுநாளே (12ஆம் திகதி) விடுதலை செய்யப்பட்டனர்.

சாந்தன், முருகன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ராஜீவ் கொலை கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், மத்திய அரசு சீராய்வு மனு தாக்கல் செய்யவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. இதற்கிடையே 6 பேர் விடுதலையை எதிர்த்து மத்திய அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த மனுவில், 6 பேர் மேன்முறையீடு விவகாரத்தில் மத்திய அரசின் வாதத்தை உச்ச நீதிமன்றம் கேட்கவில்லை. இந்த வழக்கில் இடையீடு செய்யவும் வாய்ப்பளிக்கவில்லை. குறிப்பாக, விடுவிக்கப்பட்ட 6 பேரில் 4 பேர் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும் மத்திய அரசின் வாதங்களை முன்வைக்க வாய்ப்பு வழங்கவில்லை. இயற்கை நீதி கொள்கைகளை கருத்திற்கொள்ளாமல் இவர்களின் மேன்முறையீட்டு மனுக்கள் முடித்து வைக்கப்பட்டது தவறானதாகும்.

பேரறிவாளன் உத்தரவை மட்டுமே கொண்டு 6 பேரையும் விடுதலை செய்தது தவறு. பொது ஒழுங்கு, அமைதி, நாட்டின் குற்ற நீதிமுறை ஆகியவற்றில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு தொடர்பான இந்த மனுவில் மத்திய அரசின் வாதத்தை கேட்டிருக்க வேண்டும். வெளிநாட்டவர்கள் விடுதலை தொடர்பாக எடுக்கப்படும் எந்தவொரு முடிவும் சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், இந்த விவகாரத்தில் அரசியலமைப்பு சாசனம் 7ஆவது அட்டவணையின்படி வெளிநாட்டவர்களை விடுதலைசெய்ய மத்திய அரசுக்கே அதிகாரம் உள்ளது. மேற்கண்ட வழக்கின் உண்மைத்தன்மையை ஆராயாமல் 6 பேரையும் விடுவித்த உத்தரவு மறுஆய்வு செய்ய தகுதியுடையது. எனவே, நவம்பர் 11ஆம் திகதி பிறப்பித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யவேண்டும்.

- இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார். இந்த சீராய்வு மனுவை மத்திய உள்துறை அமைச்சின் சார்பில் வக்கீல் அரவிந்த்குமார் சர்மா தாக்கல் செய்துள்ளார்.

## உலக செய்திகள்

### ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு;

# ஈரானின் பிரபல நடிகைகள் இருவர் கைது



ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த பிரபல நடிகைகள் இருவரை அந்நாட்டு அரசு கைதுசெய்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானின் பிரபல நடிகைகளான ஹென்காமெஹ் காசியானி மற்றும் காதாயூன் ஆகிய இருவரும் சர்வதேச அளவில் சிறந்த நடிகைக்கான விருதுகளை வென்றவர்கள். இவ்விருவரும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தங்கள் சமூக வலைத்தளப் பக்கங்களில் பதிவிட்டு வந்தனர். தங்களது நடவடிக்கைகளுக்காக இருவரும் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து ஹென்காமெஹ் காசியானி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குறிப்பிடும்போது, “இந்த நிமிடத்திலிருந்து, எனக்கு என்ன நடந்தாலும், எப்போதும்போல், எனது கடைசி மூச்சுவரை நான் ஈரானிய மக்களுடன் இருக்கிறேன் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென நினைக்கிறேன்” என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், பொதுவெளியில் தங்களது ஹிஜாப்பை நீக்கியதற்காக ஹென்காமெஹ் காசியானி, காதாயூன் ஆகியோரை பாதுகாப்புப் படையினர் கைதுசெய்துள்ளனர். இருவரது கைது நடவடிக்கையும் ஈரானில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, ஈரானில் 9 வயது சிறுமிமுதல் வயதான பெண்கள்வரை ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஆடை அணியும் விதத்தை கண்காணிக்க ‘காஸ்த் எர்ஷாத்’ என்ற சிறப்புப் பிரிவு பொலிஸார் பொது இடங்களில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த செப்டெம்பர் 13ஆம் திகதி ஈரானில் மஹ்ஷா அமினி என்ற 22 வயது இளம்பெண் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்று குற்றஞ்சாட்டி தலைநகர் தெஹ்ரானில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துசெல்லப்பட்ட அமினி பொலிஸ் காவலில் மிகக் கொடூரமாக தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார். தலையில் பலத்த காயம் ஏற்பட்ட அமினி கோமா நிலைக்குச் சென்றதுடன், கடந்த செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி உயிரிழந்தார் மாஷாவின் மரணம் தற்போது ஈரானில் பெரும் போராட்டம் ஏற்படக் காரணமானது. இப்போராட்டத்தில் 200இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பட்டியலினப் பெண் தண்ணீர் அருந்தியதால் நீர்த்தொட்டியை கோமியத்தால் சுத்தம் செய்த ஊர் மக்கள்



கர்நாடகாவில் சம்மராஜநகர் மாவட்டத்தில் பொது நீர்த்தொட்டி ஒன்றிலிருந்து பட்டியலினப் பெண் ஒருவர் தண்ணீர் அருந்தியதால், அந்தத் தொட்டியிலிருந்த மொத்தத் தண்ணீரையும் வெளியேற்றிவிட்டு அதில் பசுவின் கோமியத்தை ஊற்றி சுத்தம் செய்த அவலம் இடம்பெற்றுள்ளது.

கர்நாடகா மாநிலம் சம்மராஜநகர் ஹக்கோடோரா கிராமத்தில் லிங்காயத் இன மக்கள் அதிகம் வசிக்கின்றனர். அச்சமூகத்தினின் பயன்பாட்டுக்கான நீர்த்தொட்டியில் கடந்த சனிக்கிழமை பக்கத்து ஊரைச் சேர்ந்த பட்டியலினப் பெண்ணொருவர் தண்ணீர் அருந்தியுள்ளார்.

இதனையடுத்து அந்தத் தொட்டியின் நீர் வீணாக வெளியேற்றப்பட்டு பசுவின் கோமியத்தை ஊற்றி கிணற்றை கிராமவாசிகள் சுத்தம் செய்துள்ளனர்.

இது குறித்து அப்பகுதி மக்களிடம் விசாரணை நடந்தபோது உள்ளூர்க்காரர் ஒருவர், வெள்ளிக்கிழமையன்று கிராமத்தில் பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில் திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணத்திற்காக அருகிலுள்ள ஹெச்டி கோட்டே பகுதியிலிருந்து வந்திருந்த பெண்ணொருவர் ஊர்ப் பொதுத்தொட்டியிலிருந்து தண்ணீர் அருந்திவிட்டுச் சென்றுள்ளார். அதனைப் பார்த்த ஊர் மக்கள் தொட்டியிலிருந்த தண்ணீரை வெளியேற்றிவிட்டு அதனை சுத்தம் செய்வதாகக் கூறி பசு கோமியத்தை ஊற்றினர் என்றார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7